பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 29 | வியாழக்கிழமை | (12.06.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 175



ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


# இடைக்கால சபை இல்லையெனில்

# சமாதானப் பேச்சும் இல்லை!

## புலிகள் மீண்டும் வலியுறுத்து

(நமது நிருபர்)

**அரசாங்கம் வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபைக் குரிய,தெளிவான வரைபொன்றை முன்வைக்காதவரை நாம் சமா தானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளமாட்டோம்.**

**இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது உறுதியான நிலைப் பாட்டை மீண்டும் உறுதிபடத்தெரிவித்துள்ளனர்.**

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான தமது உறுதியான நிலைப் பாட்டை விடுதலைப் புலிகள் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சியிலுள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தினால் நேற்று அவ்வறிக்கை வெளியிடப் பட்டது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்ப ட்டுள்ள விடயங்கள் வருமாறு;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கும் பூர்வாங்கமான நிர்வாக அமைப்பு என்பதனை

(10ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு,புனரமைப்புக்கு மதியுரைஞர் குழு அவசியம்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில் எதிர் கால த்தில் மேற் கொள்ளப்படவுள்ள அவ சர புனரமைப்பு,புனர்வாழ்வுத் திட் டங்களை உரிய வகையில் திட் மிட்டுச் செயற்படுத்தவென,15பேர் கொண்ட மதியுரைஞர் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்று நேற்று யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய் யப்பட்டுள்ளது.

யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம் போல் தலை யையில் நடைபெற்ற மேற்படி கூட் டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி,யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் யாழ்.மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என சுமார் 40 பேர் பங்கு கொண்டிருந் தனர்.

இக் கூட்டத்தில் கருத்துரையாற் றிய அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தமது உரையில் யாழ். மாவட்டத்தில் இயங்கி வருகின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் யாவும் ஒன்றிணைந்து 1990-ம் ஆண்டுக் காலப்பகுதியல் இயங்கியது போல் தற்போதும் இயங்குவது இன்றைய தேவையாகவுள்ளது.எனவே இணை யம் அமைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைநது செயற் பட முன்வரவேண்டும்.

அதன் மூலம் தான் எமது மாவட் டத்திற்குரிய அவசரப் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை

(10ம் பக்கம் பார்க்க)

## உரும்பிராய் சிறுவர் இல்லத்தில் பாலியல் துஷ்பிரயோகம்

### 60வயது காவலாளி கைது

(தென்மராட்சி)

உரும்பிராய் வடக்கில் இயங் கிவரும் ஸ்ரீ வசந்தநாகபூசணி அம் மன் ஆலய சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் பாலியல் துஷ்பிர யோகம் இடம்பெற்றமையை அடுதது அங்கு காவலாளியாகக் கடமை யாற்றிய 60 வயது நிரம்பிய செல் லப்பா இரத்தினம் கடந்த செவ்வாய் இரவு கோப்பாய் பொலிசாரின் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு நேற்று யாழ்மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன் னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

அத்துடன் மேற்குறித்த இல்லத் தில் தங்கியிருந்த இரு பெண்பிள் ளைகளை மேலதிக மருத்துவ பரி சோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதுபற்றி மேலும் தெரியவரு வதாவது, மேற்படி இல்லத்தில் இடம் பெற்ற பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து இல்லம் சோதனைக் குட்படுத்தப்பட்டது. இதனை அடுத்தே

(10ம் பக்கம் பார்க்க)

## செங்கலடிப் பொலிஸார் இருவரும் புலிகள் வசம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்று முன்தினமிரவு வீதிப் போக்கு வரத்துக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது காணாமல் போன பொலிஸார் இருவரும்,தமது பாதுகாப்பில் இருப்பதாக விடுத லைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தமது பாதுகாப்பில் இருக்கும் இரண்டு பொலிஸாரையும் விடுவிப் பதாயின் நீதிமன்றத் தடுப்புக் காவ லில் உள்ள தமது போராளியை விடுவித்தால் மட்டுமே அது சாத்தி யமாகுமெனவும் விடுதலைப் புலி களின் மட்டு-அம்பாறை மாவட்ட ஊடகப் பேச்சாளர் கிரிசன் தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் ராசிக் குழு உறுப்பினர் ஒருவர் கடந்த மாத இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட மைக்கு பழிவாங்கு முகமாக,விடு தலைப் புலிகளின் இரண்டு உறுப் பினர்களை ராசிக்குழு உறுப்பினர் கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப் படைத்தனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளால் கண்காணிப்புக் குழு வுக்கு அறிவிக்கப்பட்டு,கண்காணிப் புக்குழுத் தலைவர் பொலிஸாருடன்

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமரும்,ஜனாதிபதியும் எனது ஓய்வை தடுக்கின்றனர்

### தேர்தல் ஆணையர் உயர் நீதிமன்றில் மனு

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் உட்பட மூத்த அரசியல் தலைவர்கள் பலர்,தான் ஓய்வு பெறுவதைத் தடை செய்து வருவதாக,தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

இத்தகைய அரசியல் தலை வர்களின் தடைகள்,அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்று குற்றம் சாடடி தேர்தல் ஆணையாளர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

61 வயது நிரம்பிய தனக்கு ஓய்வு வழங்குவதற்கு மூத்த அரசியல் தலைவர்கள் தடை விதிப்பதுடன், அதறகான அனுமதியையும் வழங்க மறுத்து வருவதாகவும் தனது மனு வில் குறிப்பிட்டுள்ள தேர்தல் ஆணை யாளர்,தான் ஓய்வு பெறுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனறும் நீதிமன்றைக் கோரியுள்ளார்.

(இ-5)

## யாழ்.பல்கலைக் கழக சமூகத்தால் மீண்டும் பொங்கு தமிழ் எழுச்சி

### எதிர்வரும் 27-ம் திகதி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் இயல்பு வாழ் க்கை சீரமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு யாழ் பல்கலைக்கழக சமூகத்தால் எதிர் வரும் 27ம் திகதி எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

"எமது நிலம் எமக்கு வேண் டும்" 'நாங்கள் எங்கள் வீடுகளிற் குச் செல்வதற்காக இராணுவத்தி னரே உங்கள் வீடுகளிற்கு செல் லுங்கள்' என்ற தொனியில், தமிழ் மக்களின் உணர்வெழுச்சியினை சர்வதேசத்தின் காதுகளிற்கு ஒலிக்கச் செய்யும் நோக்கிலேயே பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மைதா னத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ் வில் யாழ்.குடாநாட்டின் சகல பிரதேச மக்களும் அணிதிரளும் வகையில் ஏற்பாடுகள் இடம்பெறு கின்றன.

பல்கலைக்கழக மாணவ சமூ கம் இதற்காக மக்களின் வீடுக ளிற்குச் சென்று நிகழ்வு தொடர் பான கருத்துக்களை கேட்டறிந்து வருகின்றது.

(இ)

## ஜப்பான் தூதுவர் ஒட்சுகா இலங்கை திரும்புகிறார்

### அகாஸி பாலாவைச் சந்திப்பார்

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டில் பங்குப ற்றிய இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் ஹெய்சீரோ ஒட்சுகா நாளை கொழும்பு திரும்பவுள்ளதாக தூத ரக ஊடகச் செயலாளர் தெரிவித் துள்ளார்.

கொழும்புக்கு வருகை தரும் இவர் விடுதலைப்புலிகளைச் சந்திப் பாரா? அல்லது எப்போது சந்திப் பார் என்பது குறித்த விபரங்கள் எதுவும் இதுவரை தமக்கு அறிவிக் கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஸி ஜப்பான் மாநாடு தொடர்பாக லண்டனிற்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்த பின்னர் வன்னிக்குச் சென்று புலிகளின் பிரமுகர்களைச் சந்திக் கத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(த)

## சிறு விளம்பரம்

### காணவில்லை

1½ வயது கறுப்பு இளம் பசுமாடு நைலோன் கயிற்றுடன முதுகில் பெரிய சுழி உள்ளது. கண்டவர்கள் விக்னேஸ்வரன் ஆச்சாரி ஆங்கில ஆசிரியர் பிளாக் வீதி, சங்கானை என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். (7149)


# கலியுக வரதனாகிய கார்த்திகேயன் வந்துதித்த வைகாசி விசாக நாள்

தீயவை புரிந்தாரேனும், குமரவேள் திருமுன் உற்றாற்,தூயவராகி மேலைத்தொல்கதி அடைவர் என்பது கந்தபுராணத்தில் வரும் அடிகளால் நன்கு எமக்கு உணர்த்தப்படுகிறது. கலியுக வரதனாகிய கந்தவேள் சிவபிரானின் நெற்றிக் கண்ணினின்றும் சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாகி கார்த்திகைப்பெண்களால் அரவணைக்கப்பட்டு ஆறுமுகனாகிய அந்நாளே வைகாசி விசாகப்பெருநாளாகும்.

மாதம்தோறும் வரும் நட்சத்திரங்களில் வைகாசி விசாகம் மிகச்சிறப்புடையதாகும்.பௌத்தர்கள், வைஷ்ணவர்களும் கூட இத் தினத்தைப் பெரிதாகப்போற்றி விரதம் அனுஷ்டித்து வழிபாடுகள் செய்கின்றனர்.

### வைகாசி விசாக நாள்

வைஷ்ணவ ஆழ்வார்களில் முதன்மையான நம் ஆழ்வார் அவதரித்த தினமும், புத்தபெருமான் பிறந்து பரிநிர்வாணம் அடைந்ததும் வைகாசி விசாக நன்னாளேயாகும். கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாகப்போற்றி வழிபடப்படும் முருகப்பெருமானின் அற்புதங்கள் அளவற்றன.

ஆணவத்தால் பீடிக்கப்பட்ட சூரபன்மனை அவனது ஆணவத்தை அடக்கி, நல்வழிப்படுத்த வென்றே அன்னை பராசக்தியிடம் ஞானசக்தியாகியவேலை வாங்கிச் சூரபன்மனை வதஞ்செய்தும், பின் சேவலும் மயிலுமாக தம்முடனேயே அழைத்துக் கொண்டவர் கருணைக் கடலாகிய கந்தப் பெருமான் ஆவார்.

முருகப்பெருமானுடைய அற்புத வரலாறுகள் யாவும் அக்காலத்து மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு ஏற்ற அரிய பல தத்துவ உண்மைகளை, இவ்உலக வாழ்க்கையோடு ஒப்ப நன்குணர்ந்துவனவாயுள்ளன எனவேதான் கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாக கந்தப்பெருமானை மக்கள் போற்றி வழிபடுகின்றார்கள். இந்நாளிலே ஆலயங்களில் விஷேட அபிடேகங்களும்,உற்சவங்களும்,வழிபாடுகளும் மக்களால் நடாத்தப்படுகின்றன.

### யமதர்மராசன்

மேலும், வைகாசி விசாக நன்நாள் யமதர்மராசாவினுடைய சிறப்பு நாளாகவும் கொண்டாடப்படுவதுண்டு. சித்திரைக்குச் சித்திரையில் சித்திரகுப்த நாயனாரை வழிபட்டுவிட்டு, வைகாசி மாத விசாக நாளிலே யமதர்மராசனை வேண்டுதல் செய்து நரகத்தில் இருந்து மீட்சி பெற வேண்டுதல் செய்வோருமுளர்.

சமய வாழ்வு என்பது, "மக்களை வையகத்தில் வாழ்வாங்கு வாழும் வகை தெரிந்து நல்வாழ்வு வாழ வழிகாட்டுவதே " என ஆன் றோர் கூறுவர். எனவே இந்து மதத் தின் விசேட தினங்களும் இந்த நல்வழிக்குட்படுத்தி மக்களை தாமும் நல் வாழ்வு வாழ்வதுடன், பிறருக்கும் வாழ நல் வழி காட்ட வேண்டும் என்பதை அறிவுறுத்துவதாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே வைகாசி விசாக நன்னாளிலே நாமும் விசாகப் பெருநாளின் சிறப்பை உணர்ந்து நல்வாழ்வு காண்போமாக. □

**நீர்வை மணி**

## ஜெலி மீன்களால் ஆபத்து

(கொழும்பு)

மனிதனின் உடலில் நச்சுத் தன்மையையும், ஒவ்வாமையையும் ஏற்படுத்தும் 'ஜெலி மீன்கள்' கொழும்பு கடல் பிரதேசத்தில் அதிகம் காணப்படுவதால் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டு மென கொழும்பு பிரபல வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காலி, வெள்ளவத்தை, கல்கிஸ்ஸை ஆகிய பகுதிகளிலுள்ள கடல் பிரதேசங்களிலேயே இம்மீன்கள் அதிகமாக வாழ்கின்றன.

அண்மையில் மேற்படி இடங்களில் குளிக்கச் சென்ற பலர் இவ்வகை மீனின் நச்சுத் தாக்கத்திற்குட்பட்டு பல உடல் உபாதைகளுக்கு உட்பட்டு கொழும்பு தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-10)

## என்றுமில்லாத எழுச்சியுடன் உள்ளூராட்சி வாரம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேச சபைப் பகுதியில் , உளளூராட்சி வாரத்தை சிறப்பாகக்கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் ஏ.நடராஜா மேற்கொண்டுள்ளார். இவ் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் சனசமூக நிலையங்களின் சமாசத்துடன் இணைந்து நடைபெறவுள்ளன.

இவ்உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடாத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற காலம் தாழ்த்தாது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் செயலாளர் நடராஜா சனசமூக நிலையங்களைக் கேட்டுள்ளார்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சிரமதானங்கள்,மரம்நாட்டு நிகழ்வுகள் உட்பட பல எழுச்சி நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. (உ-52)

## இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைக்குண்டே விழுந்து வெடித்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் கடந்த சனிக்கிழமை இரவு முன்னாள் வரதன குழு உறுப்பினரும் அவரது ஒன்றரை வயது மகனும் கொலையுண்டதற்குப் பிரஸ்தாப நபர் கொண்டு சென்ற கைக்குண்டே காரணமெனத் தெரியவந்துள்ளது.

சம்பவதினத்தன்று சாமூவேல் சின்னையா (வயது 31) எனப்படும் பரஸ்தாப நபர் தனது ஒன்றரை வயது மகனுடன் ஆரையம்பதியிலுள்ள கண்ணகை அம்மன் ஆலயத்திற்குச செல்லும் போது இடுப்பில் இரண்டு கைக் குண்டுகளை மறைத்து வைதது்க் கொண்டு சென்றுள்ளார். பின்னர் வீடு திரும்புகையில் கட்டியிருந்த வேட்டி இடுப்பிலிருந்து நழுவும் போது, கைக்குண்டுகளில் ஒன்று நிலத்தில் வீழ்ந்து வெடித்துள்ளது.

இதனால் பிரஸ்தாப நபரும் அவரது மகனும் அந்த இடத்திலேயே மரணமடைந்ததுடன், அதேவீதியால் சென்ற 8வயது சிறுமி ஒருத்தியும் காயமடைந்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரஸ்தாப நபர் மீது கைக் குண்டுத்தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

ஆனால், பிரஸ்தாப நபர் உயிரிழந்த இடத்தில் பொலிஸாரே துப்பாக்கி ரவைகள் சிலவற்றைப் போட்டதாகவும்,அதேவேளை, உயிரிழந்த நபரின் உடலில் எந்த விதமான துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் இல்லை எனவும் மரண விசாரணையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த நிலையில் மேற்படி சம்பவத்தை வேண்டுமென்றே பொலி ஸார் திசை திருப்பும் நோக்கில் செயற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவத்தில் வெடிக்காத நிலையிலிருந்து மற்றைய கைக்குண்டு பொலிஸாரால் மீட்கப் பட்டமை தெரிந்ததே. (த-14)

## ஊனமுற்றோர் நலன் காக்க குழு அங்குரார்ப்பணம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊனமுற்றோர் நலன் காக்கும் குழு அண்மையில் உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் அங்குராப்பணம் செய்து வைக்கப் பட்டது.

கொழும்பில் நடைபெற்ற ஊன முற்றோர் மகாநாட்டில், ஊனமுற்றறோர் சங்கப் பிரதிநிதி கேட்டுக் கொண்டதற்கிணங்கஊனமுற்றோர் என இனி அவர்களை கூற வேண்டாம எனவும் விசேட தேவைக்குரியவர்கள் என்று கூறும்படியும் இந் நிகழ்வில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவைக்குரியவர்கள் பராமரிப்பு சபையின் தலைவராக உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுத பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

சமூகசேவை உத்தியோகத்தர்கள்,கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள்,உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரைக் கொண்ட பராமரிப்புக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

கிராமத்திலுள்ள விசேட தேவைக்குரியவர்களை அவர்கள் வீட்டிலேயே வைத்துப் பராமரிப்பதே இக்குழுவின் நோக்கமாகும்.

இக்குழு ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் விஸ்தரிக்கப்பட்டு பின் செயலக மட்டத்திலும் யாழ்.மாவட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. (உ-35)

## இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்கவேண்டும்

### சமாதான ஊடகவியலாளர் அமைப்பு

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என அரசு கருதினால்,வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சமாதானத்திற்கான ஊடகவியலாளர் அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகணத்திற்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் பற்றி அரசின் உத்தேச அமைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு போதிய பிரதிநிதித்துவத்திற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாமல் போகலாம் என்ற காரணத்தினால் அரசாங்கத்தின் உத்தேச பிரச்சினைகளை விடுதலைப்புலிகள் சிலவேளை நிராகரித்து விடுவார்கள்.

எனவே,திட்டவட்டமான அரசியல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியவகையில் போதிய சட்ட அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது மிகவும் பொருத்தமானது என்பதால் அதனை அரசு உடனடியாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

## ஜெயராஜ் எம்.பி விபத்தில் காயம்

(கொழும்பு)

புத்தளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே காயமடைந்து புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் பிரயாணம் செய்த வாகனம் முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றது. (ந-5)

## கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வியாழக் கிழமை பி.ப. 2.30 மணிக்கு நுணாவில் மேற்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-77)

## இவ்வாண்டின் சிறந்த விவசாயி தெரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்யும் பொருட்டு விவசாயப் போதனாசிரியா பிரிவு தோறும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருக்கும், விவசாயிகளின தொழில்நுட்ப அறிவையும், திறனையும் விருத்தி செய்யும் நோக்கில் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் கடந்த மூன்று வருடங்களாக ஒவ்வோர் பிரதேசத்திலும் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளில் சிறந்தவர்களைத் தெரிவு செய்து,கௌரவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் பங்குபற்றுவோர் கடந்த காலங்களில் சிறந்த விவசாயிகளுக்கான போட்டியில் பங்குபற்றி,பரிசில் பெறாதவராகவும் இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கேற்போர் விண்ணப்பப்படிவங்களை அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன் விவசாயப் போதனாசிரியர்களிடம் ஒப்படைக்கும்படியும் இவ்விடயம் சம்பந்தமான பூரண விபரங்களை விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களில் பார்வையிட முடியும் எனவும் உதவி விவசாய பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார். (உ)




தீவுப்பகுதி சேவையில் ஈடுபடவுள்ள 'சமுத்திர தீபம' முதலுதவிப் படகினைப் படத்தில் காண்கின்றீர்கள்.



தேசிய விளையாட்டு விழாவை ஒட்டி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கம் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (படங்கள்: க.பவன்)

## பாகிஸ்தானின் எல்லை தாண்டிய

# பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து அத்வானி அமெரிக்க அதிபருக்கு விளக்கம்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகளால் இந்தியா எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷிற்கு விளக்கமளித்துள்ளார்.

அமெரிக்கப் பாதுகாப்பு ஆலோசகர் கன்ரலீசா ரைஸீடன் கடந்த திங்கட்கிழமை இது விடயமாகப் பேச்சு நடத்திய பின்னரே அத்வானி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷினைச் சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சைத் தொடங்குவதற்காக இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஈராக்கின் அமைதிப் பணிகளில் இந்தியத்




துருப்பினர்களை ஈடுபடுத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, தான் பிரஸ்தாபித்த அனைத்து விடயங்களையும் புஷ் புரிந்துகொண்டு சினேகபூர்வமாக உரையாடியதாகவும்,

பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரப்பினை விரைவில் சந்தித்து எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டினை எடுத்து விளக்குவதாக புஷ் தன்னிடம் உறுதிமொழி அளித்திருப்பதாகவும் அத்வானி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் வழக்கமான சம்பிரதாயங்களைக் கைவிட்டு எதிர்பாராத விதமாக அத்வானியைச் சந்தித்துள்ளமை இந்திய பாகிஸ்தானிடையேயான சமாதானப் பேச்சுக்களில் முக்கியத்துவம் கொடுப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-2)



செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக அமெரிக்காவின் கனவரால் முனையிலிருந்து புறப்படத் தயார் நிலையில் உள்ள 'டெல்டா-2' ரொக்கட்.

புயல் எச்சரிக்கை காரணமாக இதன் பயணம் ஒத்திவைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

## அல்கெய்டா முகாமில் பயிற்சி பெற்ற அரேபிய மதப்பழமைவாதிகள் கைது

(மொஸ்கோ)

ஆப்கானிஸ்தானில் அல்கெய்டா முகாமில் பயிற்சி பெற்ற அரேபிய மதப் பழமைவாதிகள் 120 பேர் ரஷ்யாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரஷ்யாவின் தேசிய தினத்தை முன்னிட்டு பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் இணைந்து நடத்திய முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மதப் பழமைவாதிகள் ரஷ்யாவிலுள்ள மூடப்பட்டிருந்த ஆலை ஒன்றின் வளவில் அமைந்திருந்த குடியிருப்புப் பகுதிகளில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தனர்.

இவர்களிடமிருந்து கையெறி குண்டுகள், பிளாஸ்ரிக் வெடிபொருட்கள், கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள் என்பனவற்றையும் ரஷ்யப் பொலிசார் மீட்டுள்ளனர். (உ-2)

## இந்திய உளவுத் தகவல் அமெரிக்காவின் வசம்

(வாஷிங்டன்)

பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதிகளின் சதித் திட்டங்கள் குறித்த இந்திய உளவுத் துறையின் ஆதாரங்கள் அடங்கிய அறிக்கையினை இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி அமெரிக்க அரசின் தலைமை வழக்கறிஞர் ஜான் ஆஷ்ரா.'.ப்டை அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நேற்று முன்தினம் சந்தித்துக் கையளித்துள்ளார்.

இதன்போது எல்.கே.அத்வானியுடன் இந்திய உளவுத்துறை தலைவர் கே.பி.சிங் உடனிருந்தாரென தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாதத்தை ஒடுக்க சர்வதேச அளவில் உலக நாடுகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளில் முக்கிய அங்கமாக பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு நாடும் தொகுக்கும் உளவுத் தகவல்களை மற்றைய நாடுகளுடன் பகிர்ந்துகொண்டு கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. கோரி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-2)

## நான்கு கண்களுடன் பிறந்த பெண்குழந்தை

### நேபாளத்தில் அதிசயம்

(புதுடில்லி)

நேபாளத்தின் சப்தாரி மாவட்டத்தில் 4 கண்கள், 2 வாய்கள், 2 மூக்குகளுடன் அதிசயிக்கத்தக்க பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிறந்த இந்தக் குழந்தை 4 கண்கள் வழியாகவும் பார்ப்பதாகவும், இரண்டு வாய் வழியாகவும் பாலை உறிஞ்சிக் குடிப்பதாகவும் குழந்தையின் தாயாரான ஷாம்பதி என்பவர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிசயக் குழந்தையினை தொலை தூரங்களில் இருந்து பெருமளவு மக்கள் வந்து பார்வையிட்டுச் செல்வதாகவும் இவ்வாறு பார்ப்பவர்களில் சிலர் அந்த பகவதி தாயே தான் இக்குழந்தை என வணங்கிவிட்டுச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இரட்டைக் குழந்தையாகப் பிறக்க வேண்டிய குழந்தையே இவ்வாறு பிறந்திருக்கக் கூடும் என அங்குள்ள மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-2)

## ஆங்ஷான்சூகி நலமேயுள்ளார் பார்வையிட்ட ஐ.நா. பிரதிநிதி தகவல்

(ரங்கூன்)

மயான்மர் அரச ஆதரவுக் குழுக்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவி ஆங்ஷான்சூகியின் ஆதரவாளர்களுக்குமிடையில் நடைபெற்ற மோதல் சம்பவங்களில் சூகி காயமடையவில்லை என்றும் அவர் தேகாரோக்கியத்துடனேயுள்ளார் என்றும் மியான்மர் சென்றுள்ள ஐ.நா. பிரதிநிதி ரஷாலி இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சூகியை விடுவிக்கக் கோரி மியான்மர் சென்றிருந்த ரஷாலி இஸ்மாயில் கடும் சிரமங்களுக்கு மத்தியில் சூகியை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இதன் பின்னர் அவர் சூகியின் நிலைப்பாடு குறித்து செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரச ஆதரவுக் குழுக்களுக்கும், சூகியின் ஆதரவாளர்களுக்குமிடையே நடைபெற்ற மோதல் சம்பவங்களில் சூகி காயமடைந்துள்ளார் எனவும், இவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கடந்தவாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து, சூகியின் நிலைப்பாடு குறித்த உண்மையான தகவலை அறிய சர்வதேச சமூகமே ஆர்வம் கொண்டிருந்ததுடன், பெரும் கவலையும் அடைந்திருந்தது.

இந்த நிலையில், ராஷாலி இஸ்மாயிலின் சூகியின் நிலைப்பாடு பற்றிய தகவல் சர்வதேச சமூகத்தினை திருப்தியடைய வைத்துள்ளதாக அரசியல் அவதானிகள்



ஆங்ஷான் சூகி

கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, சூகியைத் தடுப்புக் காவலில் இருந்து விடுவிப்பதே தனது அடுத்த கட்ட நடவடிக்கை எனவும், கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மியான்மர் அமைதி முயற்சிகளை மீண்டும் தொடங்க ஏற்பாடு செய்வதுமே தனது நோக்கமென ஐ.நா. பிரதிநிதி ரஷாலி இஸ்மாயில் தெரிவித்துள்ளார். (உ-2)

## அமெரிக்க அமைதிப்படை விவகாரம்

# பகிரங்க விவாதம் நடத்த ஐ.நா. பாதுகாப்புப் பேரவை தீர்மானம்

(நியூயோர்க்)

அமெரிக்க அமைதி காக்கும் படையினருக்கு யுத்த மரபு மீறல் விசாரணை நீதிமன்றத்தில் விதிவிலக்களிப்பது தொடர்பாக பகிரங்க விவாதமொன்றை நடத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் அங்கீகாரம் இல்லாமல், ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் போர் தொடுத்தமை குறித்து பல்வேறு மட்டங்களில் சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகளின் இந்தத் தீர்மானம் மற்றுமொரு சர்ச்சையை தோற்றுவிக்கலாமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் அங்கம் வகிக்கும் ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் இதற்கு ஆதரவு வழங்குமா என்பதும் சந்தேகத்திற்கிடமாகவே உள்ளது.

கடந்த வருடமும் இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்ட போது, அமெரிக்கா தனது சாதுரியத்தால் வெற்றி கண்டது.

எனினும், இம்முறை பகிரங்க விவாதங்கள் நடத்தப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கும் நோக்கில் நாளைய தினம் வாக்கெடுப்பிற்கு விடப்படுமென ஐக்கிய நாடுகள் பேரவை அறிவித்துள்ளது. (உ-2)



உலகிலேயே மிக நீளமான மீசை (1.6 மீற்றர்) என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்று விட்டது. துருக்கியர் ஒருவர் கடந்த 10 ஆண்டுகளாக மீசையை வெட்டவே இல்லையாம். இவர் தன்னுடன் படம் எடுத்துக் கொள்கிறவர்களிடம் ஒரு போஸுக்கு 250 ரூபாய் வசூலித்து வருகின்றார்.

WORLD NEWS உலக தரிசனம்

## சார்ஸ் அபாயம் சீனாவில் நீங்குகிறது

(பீக்கிங்)

சார்ஸ் நோயின் தாக்கத்தை அடுத்து இரண்டு மாதங்களுக்கு முன் மூடப்பட்டிருந்த சீனாவின் மிகப் பெரிய மருத்துவமனையான மக்கள் மருத்துவமனை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பீக்கிங் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட இந்த மருத்துவமனை சார்ஸ் நோயை எதிர்கொள்ள போதிய வசதிகள் இல்லாமை காரணமாக ஏப்ரில் 24ஆம் திகதி மூடப்பட்டது. (உ-9)

## யுத்த நிறுத்தத்திற்கு தயாராகிறது லைபீரியா

(மன்ரோரியா)


தீவிரவாதிகளுடன் யுத்த நிறுத்தமொன்றை செய்துகொள்ள தயாராக வருப்பதாக லைபீரியா அறிவித்துள்ளது.

லைபீரியத் தலைநகரான மன்ரோரியாவில் அரசாங்கத்திற்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளும் அதேவேளை சமாதானப் பேச்சுக்களை இருதரப்பினரும் ஆரம்பிக்க வேண்டுமென சர்வதேச நாடுகளின் அழுத்தம் அதிகரித்து வருவதை அடுத்தே யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ள லைபீரிய அரசு தயாராகியுள்ளது.

இதேவேளை, லைபீரியாவிற்குச் செல்லவிருந்த சமாதானத் தூதுவர்கள் சீரற்ற காலநிலை காரணமாக தமது பயணத்தை பிற்போட்டுள்ளனர். (உ-2)

அவுஸ்திரேலியப் போர்க் கப்பல் அடிலைடு சென்னை துறைமுகத்திற்கு முதல் தடவையாக வந்தது.

இந்தக் கப்பல் சென்னையில் நான்கு நாட்கள் தங்கியிருந்து, இந்தியக் கடற்படையினருடன் இணைந்து ஒத்திகையில் ஈடுபடவுள்ளது.



## இன்று ஒரு தகவல்

# இரக்கத்திலும் ஓர் இடைஞ்சல்

"இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே" இது மௌன குரு சுவாமிகள் சொல்லியது. இந்தக் காலத்துக்கு மிகவும் அவசியமான ஒரு 'பொன் மொழி. ஏமாற்றுபவர்கள் பலர் இருக்கிறார்கள்! அப்படி இருக்கும்பொழுது ஒரு நல்ல காரியம் பண்ணினால் கூட மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டி இருக்கிறது.

ஒரு வசதியான ஆள் பத்தாயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டுபோய்க் கொண்டிருந்தார். பணம் தொலைந்து போய் விடும் என்பதற்காக அதைப் பத்திரமாக ஒரு பையில் வைத்து மூடி எடுத்துக் கொண்டு புறப்பட்டார். ஆனால் பாருங்கள்... அந்தப் பணத்தோடு சேர்த்து பையையும் தொலைத்து விட்டார். இரண்டும் போய்விட்டன. அதன் பின்னர் போன வந்த இடங்களை எல்லாம் தேடிப் பார்த்தார். ஒன்றும் கிடைத்தபாடில்லை. மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தார். நேராக ஒரு பத்திரிகை அலுவலகத்துக்குப் போனார். ஒரு விளம்பரம் கொடுத்தார். ஒரு கைப்பை பணத்தோடு காணாமல் போய்விட்டது. அது யார் கண்ணிலேயாவது பட்டால், தயவுசெய்து கொண்டு வந்து கொடுங்கள் என்ற மாதிரி விளம்பரம். அப்படி அதைக் கண்டெடுத்தவர்கள் கொண்டு வந்து கொடுத்தால் ஆயிரம் ரூபா பரிசு வழங்கப்படும் என்று பத்திரிகையில் போட்டிருந்தது.

ஒரு சாதாரண தொழிலாளி கையில் அந்தப் பணப்பை கிடைத்துவிட்டது. அந்த ஆள் பத்திரிகை விளம்பரத்தையும் பார்த்தார். அவர் மிகவும் நேர்மையானவர். மற்றவர்களின் பணம் நமக்கு எதற்கு என்று நினைப்பவர். அந்தப் பத்திரிகை விளம்பரத்திலிருந்த விலாசத்தைப் பார்த்தார். பணப்பையை எடுத்துக் கொண்டு நேராக அங்கே போனார். கொடுத்தார். எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றார். எவ்வளவு பொறுப்போடு இந்த ஆள் பணப்பையை கொண்டு போய் கொடுத்திருக்கிறார்? ஆனால், அந்த ஆளுக்குப் பணப்பை கிடைத்துவிட்டது என்றதும் புத்தி மாறிப் போய்விட்டது.

எதற்கு இந்த ஆளுக்கு அனாவசியமாக ஆயிரம் ரூபா கொடுக்கவேண்டும் என்று யோசித்தார். பத்திரிகையில் கொடுப்பதாக விளம்பரப்படுத்தி விட்டு இப்பொழுது நேரில் இல்லை என்று எப்படிச் சொல்வது? அதனால் எப்படி ஏமாற்றலாம் என்று யோசித்தார். ஒரு யோசனை பண்ணினார். உடனே பணத்தைக் கண்டுபிடித்து கொண்டு வந்து கொடுத்த அந்த ஆளை கோபமாகப் பார்த்தார். "ஏய்... இந்தப் பையில் பத்தாயிரம் ரூபா பணமும் ஓர் இரத்தினக் கல்லும் வைத்திருந்தேன் அந்தக் கல்லை காணவில்லை... நீதான் திருடி இருக்கிறாய்" என்றார்.

இது ஏதடா வம்பாகப் போய்விட்டது என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார் அவர். பணத்தைத் தவிர வேறு எதுவும் அந்தப் பையில் இருக்க வில்லை என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவர் கேட்கிற மாதிரி இல்லை. எப்படிக் கேட்பார்? ஆயிரம் ரூபா பரிசை இல்லை என்று ஆக்குவதற்காகவல்லவா இந்த நாடகம் ஆடுகிறார். நாடகம் இத்தோடு முடியவில்லை. பொலிஸ் நிலையம் வரை போய்விட்டது.

அந்த ஆள் அங்கே போய் மாட்டி விட்டு விட்டார். அதன் பின் இந்த வழக்கு கோட்டுக்கு போனது. நீதிபதி வழக்கை விசாரித்தார். இந்தாள் பொய் சொல்கிறார் என்பதை நன்கு புரிந்து கொண்டார். ஆனால் அந்த ஆள் என்ன சொன்னார் தெரியுமா? "ஐயா! நான் மிகவும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் என் வாழ் நாளில் பொய் சொன்னதில்லை! சத்தியமாக இந்தப் பையில் இரத்தினக்கல் வைத்திருந்தேன்" என்று ஒரேயடியாகச் சாதித்தார். இதற்குத் தகுந்த மாதிரி சில பொய்ச் சாட்சிகளையும் தயார் பண்ணிவிட்டார்.

இரக்கப்பட்டு பணத்தை எடுத்து வந்து கொடுத்தவருடைய நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது. நீதிபதி மிகவும் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, அந்த ஏமாற்று பேர்வழியைப் பார்த்து, "ஐயா! பெரியவரே! உங்களைப் பார்த்தவுடனேயே நீங்கள் பொய்யே சொல்ல மாட்டீர்கள் என்பது எனக்குப் புரிந்துவிட்டது. அது மட்டுமில்லை... இவ்வளவு சாட்சிகளும் இருக்கின்றன. ஆதலால் காணாமல் போன உங்கள் பை இந்தப் பையாக இருக்காது. இதுவாக இருந்தால் நீங்கள் சொல்வது மாதிரி இரத்தினக்கல் இதில் இருந்திருக்குமே! ஆதலால் இது உங்கள் பையாக இருக்காது. பை இன்னும் கிடைக்கவில்லை என்று மறுபடியும் பத்திரிகையில் விளம்பரம் கொடுங்கள் " என்றார். அவ்வளவுதான் அந்த ஆள் பதறிப் போய் உண்மையை ஒத்துக் கொண்டார்.

பரிசுத் தொகையை வாங்கி இவருக்கு கொடுத்துவிட்டு... பொய் சொன்னதற்காக அந்த ஆளுக்கு அபராதமும் போட்டு விட்டாராம் நீதிபதி. டாள்ஸ்டாய் எழுதிய இந்தக் கதையை நண்பர் ஒருவர் சொன்னார். மற்றவர்களுக்கு நல்லது செய்தால் கூட அதிலும் எவ்வளவு இடைஞ்சல் இருக்கிறது பார்த்தர்களா?

நான் கூட சில சமயம் உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு உபத்திரவத்தில் மாட்டிக் கொள்வது உண்டு. அலுவலகத்தில் விளம்பரப் பலகையில் ஓர் உள்ளூர்க் கடிதம். முகவரியைப் பார்த்தேன். எனக்கு வேண்டிய சிநேகிதரின் பெயர் இருந்தது. சரி! எடுத்துக் கொண்டு போய் அவரிடம் கொடுப்போம் என்று நினைத்துக் கொண்டு அவசரமாகக் கொண்டுபோய் கொடுத்தேன். வாங்கிப் பிரித்துப் பார்த்துவிட்டு என்னை கடுமையாக முறைத்துப் பார்த்தார். கடித்துக் குதறாத குறை! "இதற்கு என்னையா இப்பொழுது அவசரம்... இதைப் போய் பெரிதாக எடுத்து வந்து கொடுக்க வந்துவிட்டாய்" என்று பாய்ந்து விழுந்தார். "என்ன விசயம்?" என்று விசாரித்தேன். தாய் வீட்டுக்குப் போய் இருந்த அவருடைய சம்சாரம் திரும்பி வருவதாக தபால் போட்டிருக்கிறாராம்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சமாதானத்தைக் குழப்பியடிக்க எதிர்க்கட்சிகள் சதித் திட்டம்

## மயோன் முஸ்தபா எம்.பி. கண்டனம்

(கொழும்பு)

அரசிற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட எதிர்க் கட்சிகள் சமாதானத்தை நிரந்தரமாக குழப்புவதற்கு கூட்டுச் சதித்திட்டம் தீட்டி வருகின்றன. எனவே இது விடயத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டும்.

இவ்வாறு நற்பிட்டிய முனை அல் - அக்ஷா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்:

சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக விடுதலைப் புலிகள் விலகி இருப்பது எதிர்க்கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பி.யினருக்கும் பெரும் சந்தோசத்தைக் கொடுத்திருக்கிறது.

அவர்கள் இதனைத் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சமாதானத்தைக் குழப்பவும் ஐக்கிய தேசியக் கட்சி அரசை கவிழ்த்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் திட்டம் தீட்டி வருகிறார்கள்.

எனவே, முஸ்லிம் - தமிழ் சமூகங்கள் இவர்களின் சதித் திட்ட வலைகளுக்குள் அகப்படாது விழிப்பாக இருக்க வேண்டும்.

தமிழ் பேசும் இரு இனங்களும் தமக்கிடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாழைச்சேனை, மூதூர் சம்பவங்கள் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவில் விரிசலை ஏற்படுத்தி இருக்கிறது. இந் நிலை மீண்டும் தொடர எவரும் இடமளிக்கக் கூடாது.

தமிழ் பேசும் இரு இனத்தவர்களும் மிகவும் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். அது தவறின் மீண்டும் இரு சமூகங்களிற்கிடையே பிரிவினை ஏற்பட்டு எங்களின் எதிர்காலம் மிகவும் மோசமானதாக அமையும்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசியே பெற்றுக் கொள்ள முடியும் என்பதை முதலில் முஸ்லிம் அரசியல் வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேடைகளில் வீரவசனம் பேசுவதால் மட்டும் பயன் ஏற்பட்டு விடப் போவதில்லை. அரசியல் சுயலாபத்தையே இதனால் தேடிக்கொள்ளலாம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன், மக்கள் கொடுத்துள்ள பொறுப்புக்களை தலைவர்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்றார்.

(உ-10)

# டோக்கியோ மாநாட்டில் கடனுதவி எதையும் பெற்றுக் கொள்ளவில்லை

## பொ.ஐ.மு. வின் கண்டனத்திற்கு பீரிஸ் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் உதவிகளில் நன்கொடைகளும் இலகு கடன்களும் மட்டுமே அடங்குகின்றன. தவிர, கடன் எதுவும் இதில் அடங்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருப்பது கடன்களே தவிர நன்கொடையல்ல என பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம குற்றம் சுமத்தியிருப்பதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் பி.பி.சி.க்கு வழங்கிய விசேட பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையினை அடுத்து நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் யுத்தத்தினால் சேதமடைந்த பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவுமே இந் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களிலும் இத்தகைய கடன்களை இலங்கை அரசு பெற்றிருக்கிறது. ஆனால், அதனை அப்போது ஆட்சியில் இருந்த அரசு உரிய முறையில் பயன்படுத்தாது யுத்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வந்தது.

அதேவேளை உலக நாடுகளும் இத்தகைய நன்கொடைகளை பெற்றிருக்கிற போதும் அண்மையில் இலங்கையே அதிக நன்கொடைகளைப் பெற்ற நாடாக இருக்கிறது.

எனவே இலங்கை அரசு தற்போது பெற்றிருக்கும் நன்கொடை மற்றும் இலகு கடன் பற்றி எவரும்



கவலைப்படத் தேவையில்லை.

நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு, பொருளாதாரத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் இலகு கடன்களை விரைவில் அந் நாடுகளுக்கு மீளளித்துவிட முடியும் என்றார்.

(உ-10)

## இராசி பலன்

**12. 06. 2003**

**(வைகாசி 29, வியாழன்)**

திரயோதசி மு.இ 9.26 வரை
விசாகம் மு.இ. 9.57 வரை
இராகுகாலம் 1.22 - 2.52
சுபநேரம் 7.22 - 8.52
பிரதோச விரதம்

**மேடம்**
காரியத் தடங்கல், உறவினர் மனஸ்தாபம், வாகன பயம், அஜீரணம்

**இடபம்**
தேக சௌக்கியம், குடும்பத்தில் மன மகிழ்ச்சி, காரிய சித்தி, பொருள் சேர்க்கை

**மிதுனம்**
சிநேகிதர் வரவு, விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, முயற்சி கைகூடும்

**கடகம்**
பணக் குறைவு, காரிய தாமதம், சிந்தனை மிகுதி, வியாபார சிறப்பு

**சிங்கம்**
தன்னம்பிக்கைக் குறைவு, பிரயாணம், வேலைப் பளு, முயற்சி தாமதம்

**கன்னி**
நற்கீர்த்தி, அந்நியர் உதவி, வருமான அதிகரிப்பு, காரிய சித்தி

**துலாம்**
மனோ சங்கடம், முயற்சி தாமதம், அதிக செலவு, கௌரவ குறைவு

**விருச்சிகம்**
அன்பளிப்பு, காரிய சித்தி, தெய்வ சிந்தை, நல்ல முயற்சி

**தனுசு**
காரிய அலைச்சல், வேலையில் ஆர்வம், சுபசெலவு, சயனசுகக் குறைவு

**மகரம்**
எதிர்பாராத நன்மை, எடுத்த கருமங்கள் கைகூடும், குடும்ப சுகம், தனவரவு

**கும்பம்**
பிரபுத்தனம், இஷ்ட சித்தி, ஆரோக்கியம், போசன சுகம்

**மீனம்**
நிர்ப்பந்தம், குடும்பக் கவலை, காரிய தாமதம், பொருள் விரயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

### இடைக்கால நிர்வாகத்தை

# புலிகளிடம் வழங்க மறுப்பது துரோகத்தனமானது

## இ.த.ஆ.சங்கம் சுட்டிக்காட்டு

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறு கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னரும் கூட, வடக்கு - கிழக்கு பகுதிகளில் இயல்பு வாழ்க்கை ஏற்படாமல் இருப்பது வருங்காலத்தில் சமாதானம் ஏற்படும் என்பதைக் கேளவிக் குறியாக்கி உள்ளது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் வழங்குவதை வலியுறுத்தி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்,

வட-கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளுக்கு வழங்கி, உதவி வழங்கும் நாடுகள் வழங்கும் நிதிமூலம் வடக்குக் கிழக்கிற்கான புனர் நிர்மாண, புனருத்தாரண வேலைகளைச் செய்வதன் மூலம் ஓரளவுக்கு இயல்பு வாழ்வை ஏற்படுத்த பிரதமர் ரணில் தவறிவிட்டார்.

புலிகள் இடைக்கால நிர்வாகத்தை தம்மிடம் வழங்குமாறு கேட்பது புதிய விடயமல்ல. 1987ஆம் ஆண்டு இந்திய அரசின் அனுசரணையுடன் புலிகளுக்கு வழங்கப்படவிருந்த இடைக்கால நிர்வாக சபைக்கு விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பாக எழுந்த சர்ச்சை காரணமாக அன்று இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவில்லை.

இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்குவதால் நாடு பிரிந்துவிடும் என ஜனாதிபதியும், பௌத்த அமைப்புக்களும் கூறுவது ஏற்கக் கூடியதல்ல. தேர்தல் காலத்தில் ஐ.தே.கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த இந்த விடயத்தை புலிகளுக்கு வழங்க மறுப்பது பிரதமரும் அவரது அரசும் தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகும். அன்று அரசியல் யாப்பு பற்றி எதுவும் கூறாமல் இன்று யாப்பு, சட்டம் எனக் கூறுவது கேலிக்கூத்தாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# தெங்கு பயிர் நாட்டி தங்கு நிலை நீக்குவோம்

# கோடி அற்புதர் அந்தோனியாருக்கு

# பாஷையூர் பதியில் பக்திப் பெருவிழா

கோடி அற்புதர் என்றும், சக்தி வாய்ந்த புதுமை நாயகம், பதுவைப பாதுகாவலன் என்றும் போற்றப்படும் பாஷையூர் அந்தோனியார் பெருவிழா 13.06.2003 வெள்ளிக்கிழமை பாஷையூர் பதியில் கோலாகலமாக கொண்டாடப்படவிருக்கின்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் சாதி, சமய வேறுபாடுகளை மறந்து, புனித அந்தோனியார் பக்திப் பெருவிழாவில் சங்கமிக்கின்றனர். 152 ஆண்டுகள் பழமை வாய்ந்த மேற்படி ஆலயம் மூர்க்கத்தனமான போரின் கொடுமையால் மாபெரும் சிதைவுக்குள்ளானது. ஆனால், அந்தோனியார் சொரூபமோ, கூட்டுக் கண்ணாடியோ எந்த விதச் சேதமும் இன்றிக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆலயத்திற்கு ஏற்பட்ட முழுச்சேதம் 75 லட்சமாக மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் பாஷையூர் கடற்றொழிலாளர்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்களும், தம்மால இயன்ற உதவிகளைச் செய்து ஆலயத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் 2002ல் வேலைகளைப் பூர்த்தியாக்கினர். வடபகுதியில் மிகவும் பிரசித்தி பெற்றதும் பழமை வாய்ந்ததுமான இந்த அந்தோனியார் ஆலயம்,உரோமக் கட்டடக்கலை நுட்பங்களில் அமைககப்பட்டு அழகாய் காட்சியளிக்கின்றது.

### குடும்பங்கள் சிதைவு

கடந்த 20 வருடத்திற்கும் மேலாக இடம்பெற்றுவருகின்ற இனப்போரினால கடல்வளத்தையே நம்பி பாஷையூா கரையோரத்தில் வாழ்நத மக்கள் கண்ட அழிவுகள், உயிரிழப்புக்கள் அதிகம். 1985ல் பாஷையூரில் வாழ்ந்த 762 குடும்பங்களும் சிதைந்து விட்டன. இன்று அரைவாசித் தொகையினரே வாழ்வைத் தொடரச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மீதிப்பேர் வன்னியிலும், அகதி முகாம்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். அண்மைக் காலங்களில் ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து,மக்கள் தமது சொந்த மண்ணை முத்தமிட்டனர். ஆயினும் உயர் பாதுகாபபு வலயமாக கரையோரங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளதால, பாஷையூரின் அரைவாசிக் குடியிருப்புக்கள் மீது படையினர் நிலை கொண்டுள்ளனர். கடலை காணவே முடியாத அளவிற்கு வேலிகளும்



பாரிய முகாம்களும் அமைத்துள்ளார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்ளுக்கு மேலாகியும் கடல் மீனவர் மீதான கெடுபிடிகள் தீர்ந்தபாடில்லை.

இவவருடம் (2003) தேர்ப் பவனிக்காக வீதிகள் திருத்தம் செய்வதற்கு மாநகரசபை முன்வந்த போதிலும், படையினர் அனுமதிக்கவில்லை. பாஷையூர் கடற்கரை வீதி உயர் பாதுகாப்பு வலயத்துள் இருப்பதால்,அனுமதிக்க முடியாது என்று கூறியதோடு, வீதிகள் சோடனை செய்வதாயின் இராணுவத்தினரே அந்த வேலையைச் செய்து தருவதாகவும் கூறியிருந்தார்கள்.

### பெருவிழா

இத்தனை இடர்களுக்கு மத்தியிலும் அருட்தந்தை ம.யேசுரட்ணம் தலைமையில் மக்கள் இறை விசுவாசத்துடனும் பக்திப் பெருக்குடனும் 152 ஆவது நிறைவைப் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றார்கள. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இரவு வேளையில் பாாப்போர் மனதைக் கவர்ந்திழுக்கும் கொள்ளை அழகுடன் புனிதஅந்தோனியார் ஆலயம் காட்சி தருகின்றது.

இம்மாதம் 3ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 3ஆம் திகதி கடலுக்குள் அமைந்திருக்கும் அந்தோனியாரை 27 படகுகள் சகிதம் இராணுவத்தினரின் அனுமதியுடன் சென்று வழிபட்டார்கள். மறுநாள் நவநாள் திருவிழா ஆரம்பமாகியது. 12ஆம் திகதி நற்கருணை விழாவும், 13ஆம் திகதி காலை 7மணிக்கு புனித அந்தோனியார் பெருவிழாவும் கொண்டாடப்படும். இந்நிகழ்

**ஜோ. ஜெஸ்ரின்**
**கொழும்புத்துறை**

வில் சிறப்பாக தொடர்ந்தும் தேர்ப் பவனி அந்தோனியார் கடற்கரை வீதியை அடைந்து, அதனூடு பழைய பூங்கா வீதிக்குச் சென்று,ஈச்சமோட்டை வீதியூடாக அந்தோனியார் வீதியை அடைந்து கோவில் நோக்கிச் சென்று அந்தோனியாரின் சொரூப ஆசீரும் இடம்பெறவுள்ளது.

### இறைவனை வேண்டுவோம்

புனித அந்தோனியார் கிறிஸ்துவுக்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து வாழ்ந்த புனிதர். கோடி அற்புதங்கள் புரிந்து பாஷையூர் பதியிலே கோயில்கொண்ட கோடி அற்புதர். துன்ப துயரங்களுடன் வாழ்க்கை நகர்த்தும் மக்களை நம்பிக்கை தளரவிடாது காத்துவருபவர். உலக பேதங்கள், வேற்றுமைகள் அகன்று வாழ இயேசு கிறிஸ்து காட்டிய பாதையில் எம்மை-வழிநடத்துபவர். பதுவைப் பாதுகா வலன். புனித அந்தோனியார் நமது இல்லங்களிலும் சிறப்பாக நாட்டி லும் நாம் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் நீதியுடன் கூடிய சமாதானம், சகவாழ்வு நிலவ புனித அந்தோனியார் வழியாக இறைவனை வேண்டுவோம். சமாதானத் திற்காக எமது கரங்களை உயர்த்துவோம். □

# வலம்புரி நடத்திய

## தரம் 9 மாணவர்களுக்கான கட்டுரை

## போட்டி முடிவுகள்

*1ம் இடம்: றெ.தர்ஷாந்தினி - ஊர்காவற்றுறை புனித மரியாள் வித்தியாலயம், ஊர்காவற்றுறை.*
*2ம் இடம்: வி. விஜயபாரதி - மத்திய கல்லூரி - அச்சுவேலி.*
*3ம்இடம்: கஜனி புஸ்பதேவன் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யாழ்ப்பாணம்.*

**பாராட்டுச் சான்றிதழ்பெறுவோர்**

01. சி. சத்தியவாணி -அச்சுவேலி மத்திய கல்லூரி அச்சுவேலி.
02. ஸ்ரீ வள்ளி நாகேந்திரம்மானிப்பாய்-மருதடி அறநெறிப்பாடசாலை மானிப்பாய்
03. இரத்தினம் துஷ்யந்தன் -நெல்லியடி ம.மகாவித்தியாலயம் நெல்லியடி.
04. உதய சூரியன் ரமணன்- விக்கினேஸ்வராக்கல்லூரி கரவெட்டி
05. கனிஸ்ரா ஆரோக்கிய நாதன்- மயிலிட்டி றோ.க.த. பாடசாலை ஆனைக்கோட்டை.
07. த.வரதராஜன்- மானிப்பாய் மருதடி அறநெறிப்பாடசாலை, மானிப்பாய்.
08. சமந்தா தாரணி ஜெயக்குமார்- வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்.
10. சங்கமி நாகமுத்து - விக்கினேஸ்வராக்கல்லூரி, கரவெட்டி
11. வாகித்தியா முரளிதரன் -இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்,சுன்னாகம்.
12. கார்த்திகாயினி யோகேஸ்வரன்- மானிப்பாய் மருதடி அறநெறிப்பாடசாலை,மானிப்பாய்.
13. தியாகராஜ சர்மா மயூரகிரி- அத்தியார் இந்துக்கல்லூரி ,நீர்வேலி.
14. லதீகரன்- மருதடிஅறநெறிப்பாடசாலை ,மானிப்பாய்.
15. அல்பேட்யோசேவ்-புனித பத்திரிசியார் கல்லூரி,யாழ்ப்பாணம்.
16. பிரசாந்தினி பொன்ராசா -மல்லாகம் மகாவித்தியாலயம்,மல்லாகம்.
17. தர்மிளா ஜெயபால சுந்திரம்கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாலயம்சுன்னாகம்
18. அருமைநாயகம் நிருஷன்-புனிதஹென்றி அரசர் கல்லூரி,இளவாலை.
19. வெள்ளியங்கிரிநாதன் கோகுலன்-யா/இந்துக்கல்லூரி,யாழ்ப்பாணம்.
20. நர்மதா பரமசாமி-யா/வேம்படி மகளிர்உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.
22. ருஷாந்தினி அபூர்வசிங்கம்- இணுவில் மத்திய கல்லூரி,சுன்னாகம்.
23. மாதங்கினி இராசரத்தினம்-ஆவரங்கால் நடராச இராமலிங்கம் வித்தியாலயம்.
24. சுப்பிரமணியம் தனசீலன்- நயினாதீவு கணேசா வித்தியாலயம், நயினாதீவு.
25. எதிர்குலசிங்கம் பகீரதன்- வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை,வேலணை.
26. காந்தருபன் சதீஸ்- மல்லாகம் மகாவித்தியாலயம்,மல்லாகம்.
27. சிவராசா அச்சுதன்- ஞானாசாரியர் கல்லூரி,கரவெட்டி.
28. சிங்கராசா ரகீந்திரராஜ்-மானிப்பாய் மருதடி அறநெறிப்பாடசாலை, மானிப்பாய்.
29. ச. ஜன்னி -மானிப்பாய் மருதடி அறநெறிப்பாடசாலை,மானிப்பாய்.
30. ப. பத்மநாதன்- மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலை,மானிப்பாய்.
31. அ.நிருவினா-மல்லாகம் மகாவித்தியாலயம் ,மல்லாகம்.
32. திருச்செல்வன் காந்தன்-யாழ்ற்ரன் கல்லூரி ,காரைநகர்.
33. உ. உதயவாணி-துர்க்காபுரம் மகளிர் இல்லம்,தெல்லிப்பழை.
34. தர்சிகா நாகலிங்கம்-மானிப்பாய் மருதடி அறநெறிப்பாடசாலை,மானிப்பாய்.
35. சி. அபிராமி-மானிப்பாய் மருதடி அறநெறிப்பாடசாலை,மானிப்பாய்.
36. விக்கினேஸ்வரன் காந்தருபன்-நயினாதீவு மகாவித்தியாலயம், நாயினாதீவு
37. தர்சிகா முருகதாஸ்-ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி.
38. பிரிய தர்சினி பொன்னம்பலம்- ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி.
39. சங்கீதா புஸ்பராசா வேம்படி மகளி உயர்தர பாடசாலை,யாழ்ப்பாணம்.
40. மரியநில்க்ஷி பீற்றர்-திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலை,யாழ்ப்பாணம்.
41. லதீசா தங்கராசா -மயிலணி சைவ மகா வித்தியாலயம் ,சுன்னாகம்.
42. பபிதா பாலச்சந்திரன் -யாழ். மகாஜனக் கல்லூரி ,தெல்லிப்பழை.
43. வீ.றேகன்-சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
44. மிஜாந்தி சந்திர சேகரன்-ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி.
45. இரத்தினம்தவசீலன்-உரும்பிராய் ,இந்துக்கல்லூரி, உரும்பிராய்.
46. தர்சிகா புஸ்பராசா-யாழ். பெரிய புலம் மகாவித்தியாலயம்,யாழ்ப்பாணம்.
47. தர்மினி செல்வரத்தினம்-ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி.
48. அபர்ணா துரைராஜசிங்கம்-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.
49. சிவகஜனி சிறிக்குமார்-வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை யாழ்ப்பாணம்.
50. சச்சிதானந்தபிள்ளை சாரங்கன்- பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்.
51. மயூரி தர்மகுலசிங்கம்- மல்லாகம் மகாவித்தியாலயம்,மல்லாகம்.
52. கோ.ஜெயந்தன் மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலை.
53. பால்ராஜ் கிரிபரன்-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் சுன்னாகம்.
54. சோபினஜா ஜீவநாதன்- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்
55. சாலினி ஆனந்தராசா-ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி.
56. சு.கசோலினா-உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம்.
57. பபிதாரகா கடாச்சம்- வண்ணை நாவலர் வித்தியாலயம்,யாழ்ப்பாணம்.
58. பூ.துசியந்தன்- யாழ்.பூம்புகார் அ.த.க.பாடசாலை,அரியாலை.
59. யோ. அ.லின்ரன்யதீஸ்- புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்றுறை.
60. சுகன்ஜா சந்தானகுமார்-ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி.
61. சாம்பவி செல்வகுமரன்- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை சுன்னாகம்.
62. மகழ்ஜா மகாதேவன்- இணுவில் மத்திய கல்லூரி,இணுவில்
63. மேனகா சிவராசா-தேவரையாளி இந்துக்கல்லூரி,கரவெட்டி.
64. பிரதீபா குலசிங்கம்- இந்துமகளிர்கல்லூரி,யாழ்ப்பாணம்.
65. அரியரத்தினம் கிருஜன்- யாழ். இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்.
66. கிருஷாந்தி செல்வராசா-ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி.
67. தாட்சாயினி செந்தில்வேல்தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளையார் மாகாவித்தியாலயம்.
68. தவலோஜினி சுப்பிரமணியம்- ஏழாலை மகாவித்தியாலயம்,சுன்னாகம்
69. அரியராஜா அர்ச்சனா- மல்லாகம் மகாவித்தியாலயம் சுன்னாகம்.
70. சிறிஸ்கந்தராசா விபூசன்- யாழ். இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்.
71. சஸ்மிதா இரத்தினசிங்கம் வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை,யாழ்ப்பாணம்.
72. சோபினி சிவபாதசுந்தரம்- ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி
73. கோகிலா கதிரேசு- ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி
74. நிரஞ்சனி மகேந்திரம்,ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்,அச்சுவேலி
75. காயத்திரிதேவி சபாநாயகம்-யாழ். இந்துமகளிர்கல்லூரி,யாழ்ப்பாணம்.
76. கிருசா தர்மலிங்கம்- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் அச்சுவேலி.
77. தேனுஜா கைலாயநாதன்-சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி ,சுழிபுரம்.
78. பா. மகிசன்-ஆவரங்கால் நடராச இராமலிங்கவித்தியாலயம்,அச்சுவேலி
79. தர்சினி நாகேஸ்வரன் -மல்லாகம் மகாவித்தியாலயம் சுன்னாகம்.
80. டிலக்சனா இரத்தினசிங்கம்-மல்லாகம் மகாவித்தியாலயம் சுன்னாகம்.

**கட்டுரைப்போட்டியின் பரிசளிப்பு வைபவம் 22.06.2003 ஞாயிறு மு.ப. 10 மணிக்கு வலம்புரி கேட்போர்கூடத்தில் நடைபெறும். பரிசுக்குரியவர்களும்பாராட்டுச்சான்றிதழுக்குரியவர்களும் தவறாது வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

*அனுசரணை நீர்வை மணி*

**கட்டுரைப்போட்டியில் பங்கு கொண்டமாணவர்களுக்கும் அவர்களை வழி நடத்திய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோருக்கும் எமது நன்றிகள்.**

# பாதிப்படைந்த பாடசாலைகளுக்கு

# பல வழிகளிலும் 'நிக்கொட்' உதவி

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிப்படைந்த குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு 65 மில்லியன் செலவில்கட்டடங்கள் மற்றும் தளபாட வசதிகளை நிக்கொட் நிறுவனம் ஏற்படுத்தி வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களிலும், இவ் உதவிகள் அவசியத்தின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த அடிப்படையில், பாடசாலைகளுக்கான தளபாட உதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட 15 மில்லியன் ரூபா மூலம் சுமார் 10 ஆயிரம் மாணவர்களும் 550 ஆசிரியர்களும் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ் தற்போது 4 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். வலயத்தில் - 19 பாடசாலைகளும், தீவக வலயத்தில் - 5 பாடசாலைகளும், வலிகாம வலயத்தில் 2 பாடசாலைகளும் - இவ்வுதவியை இதுவரை பெற்றுள்ளன.

இதனால், தற்போது 2 ஆயிரத்து 500 மாணவர்களும், 115 ஆசிரியர்களும் பயனடைந்துள்ளனர்.

இனங்காணப்பட்ட ஏனைய பாடசாலைகளுக்கான தளபாடங்களை விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதாகஇந் நிறுவனத்தின் யாழ். மாவட்ட திட்டப் பொறியியலாளர் தெரிவித்தார்.

இதேபோல், 50 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைகளுக்கான கட்டட நிர்மாண வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

தீவக வலயத்தில் இரண்டுபாடசாலைகளிலும் வலிகாம வலயத்தில் ஒரு பாடசாலையிலும், வடமராட்சி வலயத்தில் நான்கு பாடசாலைகளிலும தென்மராட்சி மற்றும் யாழ். வலயங்களில் தலா ஒவ்வொரு பாடசாலையிலும் நிர்மாணப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (உ-04)

## அமைச்சர் தயாரத்ன

# போராட்டத்தை கைவிடுமாறு வைத்தியர்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில பணியாற்றிவரும் வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு சுகாதார அமைச்சர் பீதயாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

வைத்தியர்களுக்கான சம்பள முரண்பாட்டை இல்லாதொழிப்பதற கான கோரிக்கையோடு நேற்று முன்தினம் ஆரம்பித்த வைத்தியர்களின் நாடுதழுவிய இப் போராட்டம் குறித்து அவர்மேலும் கூறுகையில்,

இவ்விடயம் தொடர்பான எந்தவொரு தீர்மானத்தையும் அமைச்சினால் நேரடியாக மேற்கொள்ள முடியாதுள்ளது. ஏனென்றால் இதற்கான முடிவுகள் அமைச்சரவை மட்டத்திலே எடுக்கப்பட வேண்டும் என்பதால் அமைச்சரவை இவ்விடயம்குறித்து கலந்தாலோசிக்கும் காலம்வரை வைத்தியர்கள் தமது வேலை நிறுத்தத்தினை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

அத்துடன், இவ்விடயம் தொடர்பாக நிதி அமைச்சருடன் பேசவேணடும். ஏனெனில், வைத்தியர்களின் கோரிக்கை பாரிய நிதித் தொகையை உள்ளடக்கி இருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இதுகுறித்து விரைவில் முடிவொன்று எடுக்கப்படும்.

அதுவரை தமது பணிகளில் அனைத்து வைத்தியர்களும் ஈடுபட வேண்டும். தங்களின் சேவையின் தேவையை அவர்கள் உணர வேண்டும் என்றுகுறிப்பிட்டுள்ளார்.(உ-10)

## 60 குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைக்க உதவி

(சில்லாலை)

மாதகல் கிழக்கு சகாயபுரம் பகுதியில் 60குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிதியுதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 6ஆயிரம் ரூபா பெறுமதியான ஆரம்ப வேலைகள் மட்டுமே உடன் பூர்த்தி செய்யப்படுமெனவும், வேறுநிறுவனங்களின் உதவியுடன் மிகுதி வேலைகள் இடம்பெறுமெனவும் சகாயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் மா.மகேந்திரம் தெரிவித்தார். (உ-58)

## அபிவிருத்தி நடவடிக்கைகளை சரிவர நிறைவேற்ற

# வடக்கு - கிழக்கில் தனியான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்

## டோக்கியோ மாநாட்டில் பங்கேற்ற நாடுகளின் கூட்டறிக்கையில் கோரிக்கை

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிக்கு மீண்டும் அவசரமாக திரும்பிவர வேண்டும் என்று டோக்கியோவில் கடந்த 9, 10 ஆம் திகதிகளில் நடைபெற்ற "இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின்" இறுதி அமர்விலே வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இம் மாநாட்டில் கலந்து கொண்ட சர்வதேச நாடுகள் அனைத்தும் இணைந்து வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கைக்கு வழங்கிய இவ் நன்கொடை அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் வெற்றியடையும் என்ற சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டிருக்கிறது.

அரசும் - விடுதலைப்புலிகளும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு ஒன்றை எட்டுவார்கள் என்றே உலக நாட்டவர் அனைவரும் நம்புகின்றனர்.

எனவே, இரு தரப்பினரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு இலங்கையில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முன்வரவேண்டும்.

அதன் மூலமே வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ளலாம்.

அவ்வாறானால்தான் மக்கள் சமாதானத்தின் பலாபலன்களை பெற முடியும். அத்துடன், சர்வதேச நாடுகளும் இலங்கையில் மனிதாபிமான தேவைகளுக்கு தொடர்ந்து உதவிகளை செய்யமுடியும்.

மேலும், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் அனைவருக்கும் நன்மையளிக்கக் கூடிய ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இத்தகைய கட்டமைப்பு ஒன்றின் ஊடாகவே அபிவிருத்தி நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சரிவர நிறைவேற்ற முடியும்.

இதற்கு சர்வதேச சமூகமும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும். நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த இரு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

அதை விடுத்து மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்தி நாட்டின் வளங்களை அழித்து பொருளாதார வளர்ச்சியை சீர் குலைத்து மக்களின் அமைதியான வாழ்வை குழப்ப எண்ணாது இரு தரப்பினரும் விசுவாசத்துடன் செயற்பட வேண்டும் என்றுள்ளது. (உ-10)

## வீடமைப்புக்கு ஏதுவாக

## அரச காணிகளில் வசித்த 31 பேருக்குப் பெமிட்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கேவில் போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவில் அரச காணிகளில் வசித்து வந்த 31 பேருக்கு பெமிட் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையிலான குழுவொன்று போக்கறுப்புக்கு விஜயம் செய்து சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணைகளை நடத்தியபின் மேற்படி பெமிட்டை வழங்கியது.

போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவில் ஜீ.ரீ.சற். நிறுவனம் 68 வீடுகளைக் கட்டிக் கொடுக்கவுள்ளது.

காணி உறுதிகள், பெமிட் உள்ளவர்களுக்கே இவ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமென ஜீ.ரீ.சற். நிறுவனம் நிபந்தனை விதித்ததால், வீட்டிற்கான தேவை உள்ள பலர் அதனை இழக்கும் நிலை ஏற்பட்டது.

இதனைத் தவிர்க்கும் நோக்குடனேயே உதவி அரசாங்க அதிபர் இப் பெமிட்டுக்களை வழங்கியுள்ளார். (உ-35)

## ஜெயவர்த்தனபுர பல்கலை மாணவன் படுகொலை

## சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க சட்டமா அதிபர் ஆட்சேபம்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக மாணவன் ஓ.பி. சமந்த படுகொலை வழக்கின் சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இப் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள 23 சந்தேக நபர்களும் தம்மைப் பிணையில் விடுவிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த பின்னரே சட்டமா அதிபர் இவ் ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளார்.

இப் படுகொலை வழக்கின் சந்தேக நபர்களை சாட்சிகள் இனங்கண்டுள்ளனர். இந் நிலையில், அவர்களைப் பிணையில் விடுதலை செய்வது மனுதாரர்களுக்கு அநீதி விளைவிக்கும் செயலாக அமைந்து விடும்.

இவ்வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணைகள் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றன. (தி)

## சமாதானம் சமத்துவம் நிலைபெறவே உலக வங்கி நிதியுதவியளிக்கிறது

### தலைவர் ஜேம்ஸ் டி. வொல்பென்சன் கருத்து

(கொழும்பு)

சமாதானத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலும் சம உரிமைக்கும் சமூக நீதிக்கும் இடையிலும் மிகவும் வலுவான பிணைப்புக்கள் தேவையென உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் டி. வொல்பென்சன் தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் இரண்டாம் நாள் மாநாட்டிற்கு அனுப்பிவைத்த ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பதாவது:

சமாதானம் ஏற்படும் போது, பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பதே மிகவும் முக்கியமான எமது நோக்கமாகும்.

அத்துடன், போரினால் பாதிப்படைந்த பிரதேசங்களை புனரமைத்துக் கொள்ளவும் போரின் போது இடம்பெயர்ந்து பெரும் இன்னல்களை அனுபவித்துவரும் மக்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு புனர்வாழ்வை அளிப்பதற்கும், இலங்கையில் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிக்கும் பொருட்டும் உலக வங்கி உட்பட சர்வதேச சமூகம் தொடர்ந்து தமது உதவிகளை வழங்க ஆவலாக இருக்கிறது.

அத்துடன், 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கென 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி உதவியாக வழங்கவுள்ளது.

சமாதானம், பொருளாதார வளர்ச்சி, சமத்துவம் ஆகிய மூன்று நோக்கங்களை அடையும் பொருட்டே இந்த நிதியுதவியை உலக வங்கி வழங்குகின்றது என்றார். (உ-10)

## பொதுமக்கள் மீது படையினர் ரகளை

### மட்டு. செட்டிப்பாளையத்தில் சம்பவம்

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பில் செட்டிப்பாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் ''உப்பில் உறைந்த உதிரங்கள்'' எனும் ஒளி நாடாவை பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் மீது படையினர் பெரும் ரகளை புரிந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை 9.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி ஒளி நாடா அங்கு காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தபொழுது, அங்கு திடீரெனச் சென்ற 15 முதல் 20 வரையான இராணுவத்தினர் பொதுமக்கள் ஒளி நாடாவைப் பார்ப்பதை தடுத்ததுடன், ஒளிநாடாவையும் அங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், படையினருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் ஒளி நாடா திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒளி நாடா மீண்டும் அங்கு காண்பிக்கப்பட்டது. (க-14)



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட எம்.எஸ்.எவ். வைத்தியசேவைக்குழுவினருக்கான பிரியாவிடை வைபவத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமைதாங்கி உரையாற்றுவதையும் எம்.எஸ்.எவ். பருத்தித்துறை இணைப்பதிகாரி செல்வி எஸ். சிகோவின், இலங்கை இணைப்பதிகாரி டாக்டர் எஸ். வைவ் ஆகியோர் அருகில் இருப்பதையும் வைத்திய சேவைக் குழுவினருக்கு டாக்டர் எஸ்.ஜீவன ஞாபகார்த்தப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். படங்கள்:பரு. நிருபர்

# அகத்திற்கும், முகத்திற்கும் இணைப்பை ஏற்படுத்தும்

# விழிகள் ஆத்மாவின் வழிகளாய் அமைகின்றன

'அகத்தின்அழகு முகத்தில்தெரியும்' என்பது நம்நாட்டு முதுமொழி. கண்கள் முகங்களின் முகவரிகள். இவை அவசியமானவை மட்டுமன்றி அகத்திற்கும், முகத்திற்கும் இணைபபினை ஏற்படுத்துகின்றன. மருத்துவர்கள் கூட கண்களைக் கொண்டே பல நோயகளைக் கண்டுபிடித்து விடுகின்றனர்.

சாதாரண பொதுமகன கூட கணகளின் பல்வேறு உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளைக் கவனித்து அறியககூடியவனாக இருக்கிறான். உணர்ச்சிகளின் குறியீடுகளை உணர்த்தும் ஊடகமாகவே மனுக்குலத்துக்கு மாத்திரமல்ல, பிற உயிரினங்களுக்கும் இது அமைந்துள்ளது. உதாரணமாக ஒரு மனிதன் ஆழ்ந்த துக்கத்துக்கு ஆட்பட்டிருந்தால், அவனது இதழ்கள் சிரித்து மழுப்பினாலும் கூட, கண்கள் உள்ளுணர்வைப் படம் பிடித்துக் காட்டிவிடுகின்றன. சில வேளை அவனை அறியாமலே கண்ணீர் சிந்திவிடுகிறது.

### காதல்

எல்லா உயிரினங்களின் தோற்றங்களை உருவாக்கலுக்காக இறைவனால் ஏற்படுத்தப்பட்ட உள்ளுணர்வுகளின் உந்தல்கள் ஒருமுகமாக எழும போது 'காதல்' என்கிறோம். எதிர்ப்பாலாரை இணைவதற்கான தூண்டலின் ஆரம்பம் கண்வழியேதான் உருவாகிறது. இது எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. உடலியல் காதல் சிலவேளை காத்திருந்து, தவித்து இல்லாமலே போகலாம். ஆனால் அன்பின் வயப்பட்ட ஆன்மீகக காதல் உயிரோட்டமாய் வாழ்வதுண்டு. இயற்கையை நன்றாக அவதானித்தால் இந்த உண்மை புலனாகும்.

'காதல்' என்ற சொல்லுக்கு பல்வேறு அர்தங்களையும், சித்தரிப்புக்களையும் விபரித்தாலும் 'கண்கள்' தான் இவற்றின் காலதர்கள். புறக்கண்களின் சேமிப்புக்கள் அகக்கண்களில் ஆழ்ந்துவிடுகின்றன. ஒன்று மட்டும் உண்மை இவ்வாழ்வில் நிலைத்த, நீடித்த இன்பம் காண்பதாயின் அழகு, அறிவு, ஆற்றல்கள், பொருள்கள் என்றெல்லாம் அடுக்கிக கொண்டே போனாலும் அன்பு மட்டும் இல்லாவிட்டால் இவையனைதது மே வீணாகிவிடுகின்றன. 'பாயும் ஒளி நீ எனக்கு பார்க்கும் விழி நானுனக்கு' என்றே ப்ாரதியும் உச்ச நிலைக்கு அடையாளமிட்டான்.

### சோதிடத்தில் கண்கள்

விழிகள் ஆத்மாவின் வழிகள் என்று உளவியலாளரும், சோதிடர்களும் சொல்கிறார்கள். விழிகளின் வழியே ஒருவருடைய உடல், உள பாங்குகளை அறியமுடியுமென அவர்கள் கூறுகின்றனர். அவை ஒருவனுடைய மதிநுட்பம், மகிழ்வான நிலைமை, கபடம், குரூரம், அன்புடமை, இரக்கம் போன்ற இரகசியமான குணநலன்களைக் கண்டறியலாம். இதை நிமித்திகர் என அழைக்கப்படும் சோதிடத்திறனாய்வாளர்கள் பலவகைப்படுத்தி; அதைப்பற்றிக் கூறியுள்ளனர்.

### சிறிய கண்கள்

சிறியகண்களை உடையவர்களுக்கு மதிநுட்பமும், கிரகித்தற் தன்மையும் அதிகமாயிருக்கும். அவாகள் ஆழ்ந்த அறிவுடமையோடு பணத்தைச் சேமிப்பதில் கருத்துடையவராயிருப்பர். நீதியினை விரும்பும் சுபாவமுடையவர்கள்.

நடுத்தர அளவுகொண்ட கண்களையுடையோர் ஆழமான எல்லா வகையான இன்ப துன்பங்கட்கும் ஆட்பட விரும்பாதவர்கள். அவர்களிடம் பொது அறிவும் நிதானமும் இருக்கும்.

வெளியில் தள்ளிக் கொண்டிருக்கும் கண்களையுடையோர் ஆர்வமும், அதிகரசனையுமுடையவர்கள். ஆனால் எதையுமே மேலெழுந்தவாரியாகவே நோக்குபவர்கள். வட்டமான கண்களையுடையோர் பக்கசசார்பு கொண்ட தன்மை கொண்டோராயிருப்பர். ஆனால் இவர்களின் வஞ்சகமில்லாத சுபாவம் காரணமாக மற்றவரின் சுரண்டல்களுக்கு உட்படுகிறார்கள். தட்டுப போன்ற கண்களை உடையோர் இயற்கையை மேலோட்டமாகவே நோக்குவர். ஆனால் கற்பனை வளம் குறைந்தவர்கள்.

தூங்கல் கண்களை உடையவர்கள் கண்களை அகலத்திறப்பதில்லை. வாழ்வின் ஏதோ ஒரு உயர்ந்த நிலையிலுள்ள பொருட்களைப் பற்றி ஆழமான சிந்தனையில் லயித்திருப்பார்கள். சற்றுச் சரிவான 'அல்மன் வடிவ' கண்களை உடைய மேலத்தேச மக்களிடம் மோசடிக் குணம் இருப்பதாக சொல்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஞாபக சக்தியிலும், ராஜதந்திரத்திலும் வல்லவர்களாயிருப்பார்களாம்.

இதேவேளை, கீழைத்தேய முனிவராகிய அகத்தியர் எழுதிய நூலில்,கண்கள் தாமரை இதழைப் போல் அழகாய் விசாலமாய் இருந்தால் ஆரோக்கியமும், ஐஸ்வரியமும் குடியிருக்கும். எறும்புபோல் சன்னமாயிருப்பின் தரித்திரமும் விஷேட சம்போகத்தை விரும்பும் தண்மை குடிகொண்டிருக்கும். கோணலாயிருப்பின் பாபியும், குண்டாயிருப்பின கணவனுக்கு நல்லதல்ல என்றும், பச்சையாயும், கோதுமைவர்ணமுமாய் இருப்பின் அவிசாரத்தனமும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மனிதனின் கண்கள் நெருக்கமான மூடியநிலை போன்று தென்படின், அவரை நம்பமுடியாது. அகன்ற விழிகளை உடையவர்களிடம் சாதாரணமாகவே நல்ல பண்பினை எதிர்பார்க்கலாம். ஆனால் அந்தக் கண்கள் மிக அதிகமாகவே அகன்று இருப்பின் அவர்களிடம் அறிவின்மை குடிகொண்டிருக்கும். அதிக பாலுணர்ச்சியும், மற்றவர்களை அடக்கியாளும் மனோநிலையும், சிலவேளை மிருகத் தன்மையும் குடிகொண்டிருக்கும்.

கண்கள் தலைக்குள்- தாழ்ந்த நிலையில் தென்படின் கற்பனை வளமும், நல்ல நிதானமும் எச்சரிக்கையுடமையும் இருக்கும். முன்னோக்கித் தள்ளிக்கொண்டிருக்கும் கண்களை உடையவர்கள் எவரையுமே விரைவில் எடைபோட்டு விடுவாரகள். ஆனால் முழுவதுமே சரியான முடிவெனக்கருத முடியாது. வாய் ஓயாமல் கதைத்துக் கொண்டிருக்கும் தன்மை அவர்களிடம் உண்டு.

### கண்களும் நிறங்களும்

கண்களின் பல்வேறு நிறங்களை வைத்தும் குணவியல்புகளை எடைபோட்டுள்ளனர். சாதாரண நீல நிறக கண்களை உடயவர்கள் திடமான மனமுடையவர்கள். அவர்களிடம் நமபிக்கையும் சுறுசுறுப்பும், வலிமையுடைமையும் இருக்கும். ஆனால் கிரகிப்புத் தன்மை குறைந்தவர்கள்.

மெல்லிய நீல நிறக் கண்களை உடையவர்கள் அடிக்கடி மாறும் மனோநிலையுடையவர்கள். கடும் நீல நிற விழிகள் திட சித்தத்தை உணர்த்தும்.

புகை நிறமான விழிகளை உடையவர்கள் வியாபாரம் போன்ற விவகாரங்களுக்கு ஏற்றவர்கள். ஏனெனில் சரளமாகப் பழகுவது இவர்களின் இயல்பாகும். எளிதில் உணர்ச்சி வசப்படாதவர்கள். அத்துடன் தண்டக்க முமுண்டு. பழுப்பு நிறமான (மெல்லிய மண்ணிறம்) கண்களை உடையோர் சாந்தமும், ஆதரவும் இருக்கும். இரகசியமான விஷயங்களில் நாட்டமிருக்கும்.

கடும் கருநிறமான விழிகளை உடையவர்கள் எதற்கும் தலைமை தாங்கவும் அடக்கியாளும் மனோ பாவமும் கொண்டவர்கள். வீரமும்

**கே.எஸ்.ஞானமூர்த்தி**
**இணுவில்**

எடுத்த கருமத்தை முடித்து வைக்கும் தனித்திறனும் அவர்களுக்குண்டு. செம்மஞ்சள் நிறக் கண்களை உடையோர் உணர்ச்சி, இரக்கம் ஆகியவற்றில் ஆழ்ந்த புனிதத்தன்மையானவர்கள். 'சாமுத்திரிகா லட்சணத்தின்படி இத்தகைய விழிகளை உடையோரே இந்தியாவிலுள்ள துறவிகளில் அதிகமானோர் இருக்கின்றனர் என ஒரு சஞ்சிகையில் கூறப்பட்டிருக்கின்றது. கருநிற விழிகளை உடையோரும், கண்புருவங்கள் இணைந்து தொடர்பாக' காணப்படுவோரும் நீண்ட செல்வமான வாழ்வை அனுபவிப்பர் என அந்நூலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு பெண்ணின் விழிகள் மானுடைய விழிகளை ஒத்திருந்தால், கற்பனாலோகத்தில் அடிக்கடி வாழ்ந்திடுவார்கள். அடிக்கடி மாறும் மனமும், அவசர சுபாவமும் உடையவர்கள். விடா முயற்சியினால் அதிர்ஷ்டம் அவர்களை தேடி வருகின்றது.

### பிராணிகளின் விழிகளை ஒத்த அமைப்பு

யானையின் கண்களைப் போன்ற விழிகள் ராஜதந்திரம், சாமர்த்தியம், தீர்க்கதரிசனம் போன்றவற்றைக் குறிக்கும். திறந்த கண்கள் மகிழ்ச்சியையும் காதலையும் நோக்கும். மயிலின் கண்களை உடையோர் சாதாரண நடுத்தர வர்க்கத்தினர். அதேவேளை தவளை, காகம் போன்றவற்றின் கண்களை ஒத்தவர்களிடம் கீழ்த்தரமான செய்கைகள் இருக்கும். பூனையின் கண்களை ஒத்தவர்களிடம் இரக்கமற்ற தன்மையும் மிருகத்தனமான பாலுணர்வும் இருக்கும். கோழியின் கண்களைப் போனறோர் சண்டை சச்சரவை ஏற்படுத்துபவரோ, உட்படுபவரோ ஆவர்.

பாம்பின் கண்களை ஒத்தவர்கள் சுகயீனமான உடல் நிலையும், பழி வாங்கும் எண்ணமும் கொண்டவர்கள். புலியின் கண்களை ஒத்தவர்கள் உடனடியாகவே கோபப் படுபவர்கள். சுண்டெலிக் கண்கள் மதி நுட்பத்தையும், ஆந்தையின் கண்ணமைப்பு துரோக ஏற்பாடுகளையும் உணர்த்தும்.

### கண்களில் மச்சங்கள்

பொதுவாகவே கண்களில் மச்சம் இருப்பது மிக நன்மையானது. அவர்கள் பாக்கியசாலிகள். வலது கண்களின் மணிக்கு வலது புறம் மச்சம் இருக்கின், மிகச் செல்வமுண்டு. மனித உலகன் சுக போகங்களை அனுபவிப்பான். பொது சனங்களால் பாராட்டுப்பெறுவார். இடது கண்மணியின் புறம் மச்சம் இருப்பின் பலன் சிறிது குறைந்தே காணப்படும்.

கண்ணின் வலப்புறம் இருக்கும் மச்சம் ஸ்திரிலோலனாயும், இடப்புறம் ஏழ்மை நிலையையும் சூட்டுவதாக குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இவற்றை சரியான கணிப்பீடுகளாகக கருத முடியாத நிலையும் உள்ளது.

உலகப் பொது மொழி என வர்ணிக்கப்படுகின்ற விழிமொழி உணர்த தும் குறியீடுகளை உற்று அவதானிப பவரே புரிந்து கொள்ள முடியும். இந்த மொழிக் குறியீடுகளே ஆரம்பக் காதலர்களின் ஜன்னல்களாக விளங்குவது கண்கூடு.

---

## லொத்தர்சபை குறித்து உடனடி அறிக்கை

### சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர்சபையின் நடவடிக்கைகள் குறித்து உடனடியாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் பதில் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரட்ண, அபிவிருத்தி லொத்தர்சபையின் தலைவரிற்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

அபிவிருத்தி லொத்தர்சபையின் நடவடிக்கைகள் மற்றும் 2000ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஏனைய திட்டங்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றைத் தாங்கள் ஜனாதிபதியிடம் விரைவில் சமர்ப்பிக்கவேண்டும்.

அத்துடன், 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுச் செலவுகள் பற்றிய தகவல்களையும் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், ஏனைய திட்டங்களையும் பிரேரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றியும் மேற்படி அறிக்கையில் விரிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றுள்ளது. (உ-10)

---

### தனியார் பஸ்உரிமையாளர் சங்கத் தலைவர்

## அரசு-புலிகள் இடையில் சமரச பாலமாகச் செயற்படமுயற்சி

(கொழும்பு)

மீண்டும் சமாதானப் பேச்சுவார்ததையினை ஆரம்பிப்பதற்கு ஏதுவாகஅசிறகும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமரசப் பாலமாக தான் செயற்படப் போவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இப்பணியை மேற்கொள்வதன் பொருட்டு தான் இவ்வாரம் வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தவிருப்பதாகவும்,

அப்பேச்சில் விடுதலைப்புலிகள் தெரிவிக்கும் விடயங்களை தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நேரடியாகத் தெரிவிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சமாதான முன்னெடுப்புக்கள் முறிவடையாது சமாதானப் பேச்சுவார்ததையில் மீண்டும் விடுதலைப் புலிகளை ஈடுபடவைப்பேன் என்றும் அவர் மேலும் தொரிவித்துள்ளார். (உ-10)

---

### 'சாமசேவய' நிறுவனத்தினால்


## யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூவருக்கு சமாதான விருது

(தென்மராட்சி)

அநுராதபுரத்தைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் சாம சேவய என்னும் தேசியமட்ட அரசசார்பற்ற நிறுவனத்தினால் சமாதானத்திற்காக உண்மைத்தன்மையுடன் உழைக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நாடு பூராகவுமுள்ள 30 பேர் சமாதான விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த விருது வழங்கிக் கௌரவிக்கும் வைபவம் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருப்பதாக சாம சேவய என்ற அந்த அமைப்பின் தேசிய செயலாளர் சாம்சன் ஜெயசிங்க தெரிவித்தார்.

மனித முன்னேற்ற நடுநிலையத்தின் (கியூடெக்)பணிப்பாளர் சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார், யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், பெண்கள் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜினி சிவச்சந்திரன் ஆகியோரே யாழ்.மாவட்டத்தில் இருந்து சமாதான விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (உ-77)



நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற ஈழத்தமிழ்ப் புலவர் மாநாட்டில், புலவர் செ. பரமநாதனுக்கு திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் சான்றிதழும் பொற்கிளியும் வழங்குவதைக் காணலாம்.

---

## பாராட்டிக் கௌரவம்

(பருத்தித்துறை)

பட்டயக்கணக்காளர் கலாநிதி ஏ.சோமசுந்தரம்பிள்ளை, இசை ஆலோசகர் கலாபூஷணம் சரஸ்வதி கோபாலசாமி ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றம் அண்மையில் பொன்னாடை போர்ததிப் பரிசில்கள் வழங்கி கௌரவித்தது. (உ-52)

# அரசின் நல்லெண்ண நடவடிக்கை உலக நாடுகளை கவர்ந்துள்ளது

## டோக்கியோ மாநாட்டில் அதிக நிதி கிடைக்க இதுவே காரணம் என்கிறார் பந்துல

(கொழும்பு)

**சர்வதேச நாடுகள் இலங்கைக்கு வழங்கியுள்ள அதிகரித்த நிதியுதவிக்கு தற்போதைய அரசின் நல்லெண்ண நடவடிக்கையே காரணமாக அமைந்தது என பிரதி நிதியமைச்சரும் கிராமிய பொருளாதார அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாடுகள் எதிர்பார்த்த அளவினை விட கூடுதலான நிதியை இலங்கைக்கு வழங்கியுள்ளமை பற்றிக் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துக் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சில் ஈடுபட்டது மட்டுமன்றி அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பிரதமர் கூடிய கவனம் செலுத்தியிருக்கிறார்.

பேரழிவுகளை ஏற்படுத்தி வந்த கொடிய யுத்தத்தை நிறுத்தி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையினை நடத்தி, நாட்டில் அமைதியை நிலைநாட்டியுள்ள பிரதமர் மேலும் முக்கியமான 3 விடயங்கள் மூலமாக இலங்கைக்கு அதிகரித்த நிதித் தொகையைப் பெறும் வாய்ப்பை நாட்டுக்கு ஏற்படுத்தியிருக்கின்றார்.

நாட்டின் நிதிக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட குறுகிய கால மாற்றங்களும் அபிவிருத்தி செயற்பாட்டின் வெற்றியும்,

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கட்டாய மீளமைப்பும், விவசாய, கைத்தொழில் அபிவிருத்தி செயற்திட்டங்களும், மேம்பாடுகளின் தேவைகள் என்பனவும் முக்கியமான 3 காரணிகளாக அமைகின்றன.

இதேவேளை, இத்தகைய நிதி அதிகரிப்பு வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை வங்கிக் கடன் மூலம் நிறைவேற்றுவதைத் தடுத்துள்ளது.

இனி வரும் காலத்தில் மேலும் பல பயன்மிகு திட்டங்களை முன்னெடுத்து நாட்டு மக்களினதும் உலக நாடுகளினதும் நல்லெண்ணத்தைப் பெற நாமும் பிரதமரும் திட சங்கற்பம் பூண்டுள்ளோம் என்றார். (உ-10)

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு

## அதிகாரி சஞ்ஜீவவின் தந்தை குற்றத்தை ஒப்புக் கொண்டார்

(கொழும்பு)

மருதானையில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தின்போது திருடப்பட்ட பொருட்களை தனது பாதுகாப்பில் வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரியான பத்தேகன சஞ்ஜீவவின் தந்தையார் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளார்.

மாளிகாகந்த நீதிவானும், கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதியுமான குசலா சரோஜினி வீரவர்த்தன முன்னிலையில் குற்றத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து தண்டனை வழங்குவது இம்மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி மருதானையில் நடத்தப்பட்ட தமது தேர்தல் கூட்டதிற்கு சேதம் விளைவித்ததாக ஐ.தே.க அமைப்பாளர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து சி.ஐ.டியினர் புலன் விசாரணைகளை நடத்தியபோது ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரியாக விருந்த பத்தேகன சஞ்ஜீவவின் தந்தையாரின் வீட்டிலிருந்து திருடப்பட்ட பொருட்களையும் மீட்டிருந்தனர்.

மேற்படி விபர அறிக்கை சி.ஐ.டியினால் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், எலாரிஸ் பெரேரா என்ற சந்தேகநபரை இம்மாதம் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளதுடன், தண்டனை வழங்குவதையும் அத்திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

கூட்டத்திற்கு சேதம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு ஆட்கள் இருவரையும் இம்மாதம் 23ஆம் திகதி நீதிமன்றில் சமூகமளிக்குமாறு நீதிவான் முன்னரே உத்தரவு பிறப்பித்திருந்தார்.

டபிள்யு.அனுரா ரத்நாயக்க, லயனல் ரணவீர ஆகியோரே இந்த இருவருமாவர். முன்பு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய பத்தேகன சஞ்ஜீவ கடந்த ஆண்டு இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## தேவையற்ற கைதுகளைக் கண்டித்து

## மட்டக்களப்பில் இன்று பூரண ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

வீணான கைதுகள், வீதிச் சோதனைகள் போன்ற சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கப்படுவதுடன், இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்ற தமிழ் பேசும் மக்களின் கருத்தை வெளிக்கொணரும் முகமாக இன்று வியாழக்கிழமை பாடசாலைகளை பகிஷ்கரித்து, வர்த்தக நிலையங்களை மூடி, போக்குவரத்துக்களை நிறுத்தி பூரண ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் பொது மக்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அம்மன்றம் விடுத்துள்ள அறிக்கையில்,

அண்மைக் காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் சம்பவங்கள் பொது மக்கள் மத்தியில் அச்சத்தையும், அவநம்பிக்கையையும் தோற்றுவித்துள்ளன். குடும்பத்தினருக்குத் தெரியாமல் கைது செய்யப்படல், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகள் கைது செய்யப்படல், மீண்டும் ஆரம்பித்துள்ள வீதிச் சோதனைகள், பொது மக்கள் தாக்கப்படுதல் போன்ற அச்சம் தரும் நிகழ்வுகள் அரங்கேறி வருகின்றன.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப்புலிகள் சந்தேகம் என்ற போர்வையில் கைது செய்யப்படுவதும், தடுத்து வைக்கப்படுவதும் வேறு மார்க்கமின்றி விடுதலைப்புலிகளை மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுத்த மேற்கொள்ளப்படும் சமாதானத்தை விரும்பாத தீய சக்திகளின் நடவடிக்கை எனக் கருதப்பட வேண்டியுள்ளது.

அண்மையில் கூட புதூர் பகுதியில் ஆயுதம் எதுவுமின்றி அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சமாதானத்தை விரும்பும் மக்கள் மனதில் இத்தகைய போக்குகள் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளன. தொடரும் இத்தகைய கைதுகள் சமாதானச் சூழலை ஒழித்து மீண்டும் யுத்தத்தைக் கொண்டு வருமோ என்ற அச்சத்தை இன்று மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-14)

## ஜே.வி.பி. மீது பிக்குகள் பாய்ச்சல்

## அவமானச் சின்னம் எனவும் வர்ணனை

(கொழும்பு)

ஜப்பானிலுள்ள லங்காஜி பௌத்த கோவிலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்தவேளை கோவிலின் பௌத்த குரு வணக்கத்திற்குரிய பணகல உபதிஸ்ஸ தேரர் மீது ஜே.வி.பி. தீவிரவாதிகளின் தாக்குதல் முயற்சி குறித்து இலங்கை பௌத்த பிக்குகள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

ஜே.வி.பி.யுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருக்கும் மேற்படி குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விகாரைக்கு புதிய தகோபா ஒன்றின் நிர்மாணிப்பை தொடக்கி வைப்பதற்கு சென்றபோது அந்த மத வைபவத்தைக் குழப்புவதிலும் ஈடுபட்டிருந்ததாக வண மதுலுவவே சோபித தேரர் கண்டித்துள்ளார்.

தேசப்பற்றுள்ளவர்களாக தம்மைத் தாமே அழைத்துக் கொள்பவர்களே இந்த அவமானகரமானதும், கண்டிகத்தக்கதுமான செயலைப் புரிந்திருக்கின்றார்கள். இது அவர்களது அடிப்படையான மனப்போக்கை காட்டுகின்றது.

சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் அவர்கள் இத்தகைய நடத்தையை காட்டியிருப்பது வேதனைக்குரியது என்று தேரர் மேலும் தெரிவித்தார்.

லங்காஜி விகாரையில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி வேதனை வெளியிட்டுள்ள வண. தம்மாலோக தேரர், பௌத்த மதத் தலைவர் ஒருவர் மீது இத்தகையதொரு தாக்குதல் முயற்சியை இதற்கு முன்னர் வேறு எவரும் செய்ததில்லை என்றும்,

மகா சங்கத்தின் உறுப்பினர் ஒருவருக்கு மட்டுமல்ல, நாட்டின் பிரதமருக்கும் இது பெரும் அவமானத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது ஒரு கோழைத்தனமான செயல் என்றும் தேரர் தெரிவித்துள்ளார். (உ-5)

### ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது இனந் தெரியாதோரால் நேற்று முன்தினம் மாலை கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இக் கைக்குண்டுத் தாக்குதலினால் ஈ.பி.டி.பி. அலுவலகம் பலத்த சேதமடைந்துள்ளதாகவும், எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் அவ் அலுவலகப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சைக்கிளில் வந்த நபரொருவரே கைக்குண்டை வீசி விட்டுத் தப்பிச் சென்றதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

### கணனிப் பயிற்சி நிலையம் இன்று திறப்பு

(பருத்தித்துறை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானமும் இந்து கலாசார அமைச்சும் இணைந்து சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கவுள்ள நவீன கணனிப் பயிற்சி நிலையம் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் இன்று திறந்து வைக்கப் படவுள்ளது.

வடமராட்சிப் பிரதேச இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி ஆரம்பிக்கப்படவுள்ள இக்கணனிப் பயிற்சி நிலையத்தில் குறைந்த கட்டணத்தில் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

### அம்பாறை உபகுழு கூடியது

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட உபகுழுக் கூட்டம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் தரப்புப் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசன்யன் தலைமையிலும், முஸ்லிம்கள் தரப்புப் பிரதிநிதிகள் மொகைதீன் தலைமையிலும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முஸ்லிம்களிடம் அவர்களது காணிகளை மீள ஒப்படைப்பது தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. (த-14)


### தரம் 10 மாணவர்களுக்கான
## கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மூத்த எழுத்தாளர்
அமரர் கே. டானியல் ஞாபகார்த்தமாக
கட்டுரையின் தலைப்பு
**தொலைக்காட்சியும மாணவர்களும்**

போட்டியின் விதிகள்:

தரம் பத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 225சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.06.2003ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப்போட்டி இல-5**

மாணவர் பெயர்: ..............................
பாடசாலை முகவரி: ..............................
..............................
கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................
ஆசிரியர்.

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.
– குறள்

# வலம்புரி

## ஆமிடேஜின் அறியாமை

பிரதமர், ஜனாதிபதி, விடுதலைப்புலிகள் ஆகிய முத்தரப்பினரும் இணைந்து சமாதானப்பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமென அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ் கேட்டுள்ளார்.

டோக்கியோவில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை அடுத்து இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஆமிடேஜ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.அவரின் கருத்தின்படி சமாதான முயற்சி வெற்றியளிக்க வேண்டுமாயின், ஜனாதிபதி சந்திரிகாவின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை அவர் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

அப்படியானால் சமாதான முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் நிலைப்பாடு என்ன? அவர் சமாதான முயற்சிக்கு உள்ளார்ந்தமான பங்களிப்பை வழங்குவாரா? போன்ற கேள்விகள் எழவே செய்யும்.

சமாதான முயற்சியைக் குழப்புவதில் முனைப்புடன் செயற்படும் ஜே.வி.பியுடன் கூட்டை ஏற்படுத்த முயற்சிக்கும் ஜனாதிபதி எவ்வாறு சமாதானமுயற்சிக்கு உதவுவார்.

இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதில் பெருந்தடையாக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா,டோக்கியோ மாநாட்டிற்கு எழுத்து மூலமான வாழ்த்துச் செய்தியை தெரிவிக்க முடியாதென வெளிப்படையாகக் கூறியிருந்தார். அத்துடன் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதையும் அவர் விரும்பவில்லை.

அதேவேளை, டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதை எதிர்த்த ஜே.வி.பியினர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கொண்ட சமாதான முயர்சியை எதிர்த்து ஜப்பானில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இத்தகைய நிலைமைகளின் மத்தியில் சமாதான முயற்சிக்கு ஜனாதிபதி உதவவேண்டுமென ஆமிடேஜ் கேட்டிருப்பதில் நியாயம் இருப்பினும் ஜனாதிபதியை நேரில் சந்தித்து, இதுபற்றி அவர் ஏதாவது எடுத்துரைத்துள்ளாரா என்றால் இல்லை என்பதே பதிலாகும். ஒருநாட்டின் அதியுயர் பதவியை வகிக்கும் ஜனாதிபதியே சமாதான முயற்சியை எதிர்க்கிறார் எனில், விடுதலைப்புலிகள் சமாதானத்தை முன்னெடுக்க வேண்டுமென ஆமிடேஜ் கோரிக்கை விடுவது இரண்டாம் படியானதே தவிர முதற்படியானதன்று. இலங்கையில் சமாதான முயற்சி ஏற்பட வேண்டுமாயின் அதனை அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ் விசுவாசத்தோடு விரும்புவாராயின், முதலில் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து சமாதானமுயற்சி வெற்றியளிக்க விசுவாசத்தோடு செயற்படுமாறும் கேட்பதே பொருத்தமாகும்.

# சுயநிர்ணய உரிமையோடு தேசிய இனமாக

# மரபுவழித் தாயகத்தில் வாழ விரும்புகிறோம்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசு யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச வேண்டும் என்ற விடயத்தை சர்வதேசத்திற்கு கூறுவதற்காக 2001 தை 17இல் வயது வேறுபாடின்றி யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் அணி திரண்டனர். உரத்த குரலில் சர்வதேசத்திற்கு கூறினர். உலகம் வியப்புடன் பார்த்தது. இலங்கையில் இனப்பிரச்சனை உள்ளதென உணர்ந்து கொண்டது. தமிழ் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொண்டது. அதன் பின்னர் சந்திரிகாவின் பொய்ப்பிரசாரம் சர்வதேசத்தின் முன்னாள் எடுபடுமானால் போனதுடன் யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று உலகம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியது அதனைத் தொடர்ந்து வந்த அரசியல் மாற்றங்களுடன் யுத்தம் நிறுத்தப்பட்டது. உடன்படிக்கைகள் கைச்சாத்தானது. பேச்சுக்கள் ஆரம்பமானது இன்றுவரை யுத்தமில்லாமல் சாவுகள் இல்லாமல் மக்கள் ஓரளவு அமைதியாக வாழ முடிகிறது.

இவற்றுக்காக மக்கள் செய்தது ஒரே ஒரு நாள் ஒரே ஒரு மணி நேரம ஓரிடத்தில் ஒன்று கூடி ஒற்றுமையாக எமது கருத்துக்களை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியது மட்டுமே ஆகும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

தமிழ் மக்களின் உரிமைக்கான அமைதிவழிப்போராட்டங்கள் தோல்வியுற்ற பின்னர் ஆயுத போராட்டம் முனைப்புப் பெற்றது. காலத்துக்குக் காலம் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிய பேரினவாத அரசுகள் ஒவ்வொன்றும் புலிகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டனவே தவிர, தமிழ் மக்களுக் கான எந்தவொரு நியாயமான அரசியல் தீர்வினையும் வழங்குவதற்குத் தயாராக இருக்கவில்லை. ஒவ்வொரு அரசும் தாம் கதிரை யேறுகிற பொழுது தமது அரசை இராணுவரீதியாக பலப்படுத்துவதற்கே ஒப்பந்தங்களைப் பயன்படுத்தினவே தவிர உண்மையில் பிரச்சினைக்கு ஜனநாயக வழித்தீர்வு காண்பதற்கு விரும்பவில்லை. எனினும், விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சர்வதேச உதவிகள் இன்றி தனது சிங்களப்படைகளால் மோதி வெல்ல முடியாது என்ற நிலையில் அரசுக்கு சர்வதேச உதவிகள் தேவைபட்டது. குறிப்பாக 1994ம் ஆண்டு சந்திரிக்கா அரசு பதவியேற்றபின் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்திற்கு திட்டம் தீட்டிய பொழுது சர்வதேச. உதவி பெரிதும் தேவைப்பட்டது.

ஒரு இனத்தை அழிப்பதற்கென எந்தவொரு உலக நாட்டிடமும் நிதியுதவி கோரமுடியாது என்ற நிலையில், வடக்கு - கிழக்கில் ஆயுதமேந்திப் போராடும் புலிகளைப் பயங்கரவாதிகள் என உலகிற்கு சித்திரித்துக் காட்ட அரசு முயன்றது. இதற்கு லஷ்மன் கதிர்காமர் கருவியாகப் பயன்படுத்தப்பட்டார்.

இருவரும் சேர்ந்து சர்வதேச இராஜதந்திரிகளைச் சந்தித்து 'இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு சகலஉரிமைகளும் வழங்கப்பட்டன. தமிழ் மக்களுக்கு எந்த உரிமைகளும் மறுக்கப்படவில்லை சகல உரிமைகளும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் அந்நியோன்நியமாக வாழ்கின்றார்கள்'.

ஆனால், புலிகள் தமிழ்மக்களை கொடுமைப்படுத்துவதனால் புலிகளை அழித்து தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும். அதற்கு உதவுங்கள் என்று சர்வதேச நாடுகளைச் சந்திரிகா கேட்டார். அப்பொழுது ஒரு தமிழரான லஷ்மன் கதிர்காமர் சந்திரிகா அரசின் வெளிவிவ்கார அமைச்சர் பதவியில் இருந்தமையினால் உலகம் அவர்களது கருத்துக்களை முழுமையாக நம்பி அரசுக்கு ஆயுத உதவிகளை வழங்கியது. இவ்வாறு தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவன பொய் கூறி வாங்கிய ஆயுதங்களைக் கொண்டு தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதற்கும், அழிப்பதற்கும் என ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்திற்குப் பெயர் 'சமாதானத்திற்கான யுத்தம்'

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது தமிழ் மக்களைக் காப்பாற்ற வென சந்திரிகா அரசால் யாழ் குடாநாட்டிற்கு அனுப்பப்பட்ட 40ஆயிரம் படைகளும் குடாநாட்டில் கொலைவெறி தாண்டவமாடின. அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரக் கணக்கில் சுட்டுக்கொல்லப்பட்டனர். மக்களது வீடுகள் விமானக் குண்டு வீச்சுக்களாலும், எறிகணைகளாலும், தகர்த்தெறியப்பட்டன. மக்கள் ஓரிரு நாட்களில் கைகளில் கிடைத்த பொருட்களுடன் இடம்பெயரும் நிலை ஏற்பட்டது. ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதுகாப்பிற்காக யாழ்.வலிகாமம் பகுதிகளை விட்டு வெளியேற வலிகாமம் சுடுகாடாக காட்சியளித்த நிலையில் குடாநாட்டில் இருந்த புலிகளை அழித்து யாழ்ப்பாணத்தை மீண்டு விட்டதாக அரசு உலகம் முழுவதும் பிரசாரம் செய்தது. ஆனால், சிங்களப் படைகளது கோரத்தாண்டவம் பற்றியோ, கொல்லப்பட்ட உயிர்கள் பற்றியோ அல்லது அழிக்கப்பட்ட சொத்துக்கள் பற்றியோ உலகத்திற்கு எதுவும் தெரியாது.

தொடர்ந்து இடம்பெயர்ந்து வெளியேறிய மக்கள் விரும்பியோ விரும்பாமலோ மீண்டும் இராணுவம் ஆக்கிரமித்த வலிகமம் பிரதேசத்தினுள் திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம் காரண்மாக மீண்டும் அங்கு திரும்பி வந்தபொழுது குளிர்பானம் கொடுத்து வரவேற்ற ஸ்ரீலங்காப் படைகள் அனைத்து மக்களும் திரும்பி வந்த பின்னர் தனது கொலைவெறியை ஆரம்பித்தது. பல ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்ட்டனர். பல பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். பல ஆண்கள் அடித்துக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் இவையெல்லாம் சமாதானத்திற்கான யுத்தத்தின் பெயரால் தமிழ் மக்களை காப்பாற்றவென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

இவை அனைத்தும் 1995 - 2000 ஆண்டு வரை தொடர்ந்து அரங்கேறிக்கொண்டிருந்தன. இக்காலம் முழுவதும் மௌனமாக இருந்தனர். இந்த மௌனம் சந்திரிகாவுக்கான மக்களது ஆதரவு என உலகம் நினைத்தது. அதுவரை காலமும் அச்சத்தில் உறைந்து மரணபயத்தில் வாழ்ந்த இராணுவ அடக்குமுறையின் உச்சத்தின் வாய்திறந்து பேச எத்தனித்தனர். பல்கலைக்கழக மாணவர்கள் அரசின் இப் பொய்ப்பிரச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க தீர்மானித்தனர். மக்களின் விருப்பங்களை அறிய வீடுவீடாகச் சென்றனர்.மக்களுடன் கலந்துரையாடினர். மக்கள், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அரச அதிகாரிகள் அனைவரும் விழிப்படைந்தனர். நாம். நிம்மதியாகவும் சுதந்திரமாகவு எமது முழு உரிமைகளோடு வாழ விரும்புவதாக உறுதியாகக் கூறினார்கள். அதுவரை அடங்கியிரந்த மக்களிடையே வேகம் பிறந்தது. அனைவரது கருத்துக்களினதும் அடிப்படையில் தமிழ் மக்களது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதென்றும், மறுக்கப்பட்ட உரிமைகளான,

சுயநிர்ணய உரிமையோடு, தனித் தேசிய இனமாக, மரபு வழித்தாயத்தில் வழ விரும்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# இருபாலை கிழக்கு வீதியால்

# செல்வோர் அச்சம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு வீதியில் அண்மைக்காலமாக வயோதிபர்களையும், பெண்களையும் இலக்கு வைத்து வீதியில் செல்லும் போது அவர்களின் நகைகளை சூறையாடும் சம்பவம் அதிகரித்துள்ளது.

பகல் வேளையில் அவ்வீதியால் செல்வோரின் நகைகள், கெல்மட் அணிந்த மோட்டார் சைக்கிள் இளைஞர்களால் சூறையாடப்படுகின்றன.

இதுவரை இருபாலை கிழக்கு வீதியில் இத்தகைய நகைபறிப்புச் சம்பவம் நான்கு இடம் பெற்றுள்ளது.

தொடர்ந்து ஒரே குழுவினரே இச் செயலில் ஈடுபடுவதாக நம்பப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் செல்லும் இளைஞர்கள் அவர்களைத் தாக்கி விட்டு நகைகளை சூறையாடிக் கொண்டு வேகமாக ஓடி மறைந்து விடுகின்றனர்.

இச் சம்பவங்கள் தொடர்வதால் அவ்வீதியால் செல்வதற்கு வயோதிபர்களும் பெண்களும் அச்சமடைந்துள்ளனர். (இ)



## சாயி அருளமுதம்

வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் தோற்றும் ஒரு வர்ண வேலைப் பாடாகும் சந்தோஷமான இரு கணப்பொழுதுகளுக்கு மத்தியில் காணப்படும் இடைவேளையே துயரம் துயரம் ஆகும். இரு யுத்தங்களுக்கு நடுவே காணப்படும் இடைவெளியே சமாதான மாகும். முன் இல்லாத ரோஜா இல்லை. கூர்மையாக மலர் பறிப் பவன் முள்ளை விலக்கி மலர்களைச் சேகரிப்பான். கொடுக்கு இல் லாத தேனீ இல்லை. இருப்பினும் தேனைச் சேகரிப்பதில். தான் கெட்டித்தனம் இருக்கிறது. கஷ்டங்களும் இடர்களும் உங்களைப் பிடித்து அலைக்கழித்தாலும், கடமையும் அர்ப்பணிப்பும் கொண்ட பாதையிலிருந்து உங்களைத் திசை திருப்புவதற்கு அவற்றிற்கு இடமளிக்கக் கூடாது.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வலி.கிழக்கு பிரதேச சபையின் ஆதரவுடன் மாபெரும் விளையாட்டுப் போட்டி இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வலி கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.வெங்கடாசலம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை வலிகிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தினால் உள்ளூராட்சி வாரத்தை ஒட்டிய கருத்தரங் கொன்றும் எதிர்வரும் 19 திகதி நடைபெறவுள்ளது.(இ-5)

## மஞ்சவனப்பதியில் கும்பாபிஷேகம்

கொக்குவில் மஞ்சவனப்பதி வசந்த மண்டப கும்பாபிஷேகம் இன்று காலை 9.00 மணிக்கும் 10.00 மணிக்கும் இடையிலான சுப நேரத்தில் நடைபெறவுள்ளது. (இ-45)

## மரண விசாரணையில் மகன் சாட்சியமளித்தார்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன் தினமிரவு இனம் தெரியாதோரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட நடராசா சுப்பிரமணியம் என்பவரது மரண விசாரணை நேற்று வவுனியா மாவட்ட பதில் நீதிவான் எம். சிற்றமபலம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்மரண விசாரணையின் போது இறந்தவருடைய 12 வயது நிரம்பிய மகன் சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியமளிக்கும் போது தோட்ட வேலையை முடித்துக் கொண்டு எனது தந்தை வீடுதிரும்பிய வேளை இனம் தெரியாத நபர் ஒருவர் தந்தையைத் தேடி வீட்டுக்கு வந்தா. அவருடன் வீட்டு முற்றத்தில எனது தந்தை உரையாடிக்கொண்டிருந்த போது திடீரென அந்நபர் தனது இடுப்பில் ஒழித்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து எனது தந்தையை நோக்கி சுட்ட பின்பு தப்பி ஓடினாரென சிறுவன் தனது சாட்சியத்தின் போது கூறினான். (இ-13)

# இடம்பெயர்ந்த மக்களின்

# இடர்போக்க ஏற்பாடு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோயில்,அம்பன் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து குடத்தனைப்பகுதிகளில் தனியார் வீடுகளிலும் காணிகளிலும் வசித்து வரும்38 குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டகைகள் ,கிணறுகள், மலசல கூடங்கள் என்பவற்றை அமைத்துக் கொடுப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் முன்வந்துள்ளது.

தனியார் வீடுகளிலும், காணிகளிலும் வசித்து வந்தஇக் குடும்பங்கள் காணிச்சொந்தக்காரர்களின் நெருக்குதலால் வெளியேறும் நிலமை ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து உதவி அரசாங்கஅதிபரின் முயற்சியால் குடத்தனை வடக்கு கிராமஅலுவலர் பிரிவில் 21 வீடுகளும் , குடத்தனை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 17 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை,இக்குடும்பங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பும் போது அமைக்கப்படும்கிணறுகள், மலசல கூடங்கள் என்பன காணிச் சொந்தக் காரர்களுக்கே சேரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-35)

# ச.செ.சங்க திருமலைக்கிளை மட்டு. கிளையுடன் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கிளை, மட்டக்களப்பு மாவட்ட செஞ்சிலுவைச் சங்கக் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் குறைவடைந்து உள்ளதாகவும் இதனால் திருகோணமலை மாவட்டக் கிளை மட்டக்களப்பு மாவட்டக்கிளையுடன் இணைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டக் காரியாலயத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இதேவேளை சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர், இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றினை டிசம்பர் மாதம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் விடுக்கவுள்ளது. (த-14)

---

## இடைக்கால...

விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளார்கள்.

நிலச்சட்டத்தின் அடிப்படையில் அவர் அறிவித்திருக்கும் இந்த அழைப்பானது,பழைய நிலைப்பாட்டை புதிய சொற்களில் முன் வைத்துள்ளதேயொழிய வேறில்லை.

பிரதமர் இப்போது முன் வைத்திருக்கும் இந்த அமைப்பு ஏற்கனவே எங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அதனது போதாமைகள்,அதனது வரையறைகள் போன்றன எமக்கு ஒவ்வாது என்பதால் நாம் ஏற்கனவே அதனை நிராகரித்தோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாம் கோரியதற்கு ஏற்புடையதான செயல் சாத்தியமுள்ள அரசியல் நிர்வாகக் கட்டமைப்பின் முன்வரைபினை அளிக்கத்தவறியுள்ளார். விடுதலைப் புலிகள் எத்தகைய நிர்வாக அமைப்பைக் கோரினார்கள. அரசு எத்தகைய அமைப்பை பரிந்துரைத்தது என்பது தொடர்பாக நிதி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் இடையில் வைத்த கருத்துடன் நாம் முற்றிலும் முரண்படுகிறோம்.

எங்களது தலைமை ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பைக் கோரியது. விரிந்த அளவில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றுகிற மாதிரியான அரசியல் நிர்வாக அமைப்பை விடுதலைப்புலிகளின் தலைமை கோரியது ஆனால் அரசு அந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளக் கூடிய ஒரு குழு அமைப்பையே வழங்கியது.

விடுதலைப் புலிகள் பல்லாண்டுகளாக எதிர்த்துப் போராடி வருகின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட இனவாதச் சட்டத்தை இதற்குப் போர்வையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கான இறுதி அரசியல் தீர்வு தொடர்பில் விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா அரசினது நோக்குடன் தீவிரமானதும் வேறானதுமான பார்வையைக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைய யாப்பில் துளியளவு மாற்றத்தையே கொண்டுவர பிரதமர் விரும்புகிறார். ஆனால் விடுதலைப் புலிகள் இன்றய அரசமைப்பில் புரட்சிகரமான மாற்றத்தை வேண்டுகிறார்கள்.

மதச்சார்பற்ற சமத்துவமான தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்த சட்ட அமைப்பையே நாங்கள் விரும்புகினறோம்.

எல்லைக்கு அப்பாலான அரசியல் சக்திகளை அழைப்பதன் மூலம் இனப்பிரச்சினையை பிரதமர் ரணில் மேலும் சிக்கலாக்கியிருக்கிறார்.

இனப்பிரச்சினை என்பது உள்நாட்டு விவகாரம் என்பதற்கு மாறாக வெளிநாட்டுச் சக்திகளை அவர் அழைக்கிறார். பாரிய அளவிலான பொருளாதார அரசியல் வீழ்ச்சிகளால் பிரதமர் ரணில் இறுதி அடைக்கலமாக சர்வதேச பாதுகாப்பு வலயம் என்பதை தேர்ந்திருக்கின்றார்.

இதன் மூலம் பேச்சுவார்த்தை என்பது திசைதிரும்பியிருக்கிறது. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பதற்கு மாற்றாக இப்போது சர்வதேசிய சக்திகளின் தலையீடு என்பதாகப் பிரச்சினை திசைமாறியிருக்கிறது. இது இலங்கைத் தீவின் அரசியல் பொருளியலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகும்.

டோக்கியோ நிதி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வெளியிடப்பட்ட ஆவணங்களோ, முடிவுகளோ அதனது உள்ளுறையோ, விடுதலைப் புலிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. இவைகளில் விடுதலைப்புலிகளிற்கு எவ்விதகட்டுப்பாடும் இல்லை. விடுதலைப் புலிகள் இதனது உருவாக்கத்தில் எவ்விதத்திலும் சம்மந்தப்படவில்லை.

இந்தக் கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் மற்றும் அரசின் தந்திரோபாய கூட்டணியினரால் உருவாக்கப்பட்ட இந்த தந்திரோபாய அறிகையினை விடுலைப் புலிகள் மீது சுமத்த முயற்சிக்கப்படுகறது. இது எமக்கு ஏற்புடையதல்ல என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)


## சமகால அரசியல் கருத்தரங்கு

விடயம் :- இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வும் உலகளாவிய சவாலும் (ஓர் சமகால பார்வை)

கருத்துரை வழங்குபவர்:- K.T.கணேசலிங்கம் (விரிவுரையாளர்,சமூக அரசறிவியல் துறை, யாழ்.பல்கலைக் கழகம்)

இடம்:- கைலாசபதி கலையரங்கு

காலம்:- 13.06.2003(வெள்ளிக்கிழமை)

நேரம்:- பி.ப.3.00 மணி (புதிய நேரம்).

மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்

(7150)



## பகிரங்க ஏல விற்பனை

பண்டாரமாளிகை வளவில் உள்ள வெட்டப்பட்ட மரக்கிளைகள் எதிர்வரும் 17.06.2003-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் பிணைப்பணமாக ரூபா 50.00 செலுத்த வேண்டும் ஏனைய விடயங்களை மாநகரசபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்
ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(c/6278)


# ஜே.வி.பி. உள்ளிட்ட இடது சாரிகள் சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றைய அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகள் முன்னேறும் போக்கில் இல்லாத நிலையில் ஜே.வி.பி உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் யாவும் ஐக்கியப்பட்டு சமாதானத்தை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. என்று கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பொ.ஐ.முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஜே.வி.பி இணங்கியுள்ளமை மிகப்பெரும் வெற்றியாகும் என்று கூறினார். ஜனாதிபதி கேட்டுக்கொண்டதன் பேரில் நிமால் ஸ்ரீபாலடீசில்வா, ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் பற்றி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்து விளக்கினார்.

இனப்பிரச்சினை தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு பற்றி சமசமாஜக் கட்சியினர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த சில்வா இனப்பிரச்சினை விடயத்தில் ஜே.வி.பி நல்ல நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் சில இடதுசாரிக் கட்சிகள் கொண்டிருக்கும் நிலைப்பாட்டிலும் பார்க்க ஜே.வி.பி மிகச்சிறந்த நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த திங்களன்று நடைபெற்ற ஸ்ரீ.ல.சு.கட்சி, ஜே.வி.பி இணைப்புத் தொடர்பான சந்திப்பில் எந்தவித உடன்பாடும் ஏற்படவில்லை என்று வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

---

## செங்கலடிப்.......

தொடர்பு கொண்டு கேட்ட போது சம்மந்தப்பட்ட புலி உறுப்பினர்கள் கைக்குண்டுடன் நின்றதாகவும் இதனாலேயே தாம் அவர்களைக் கைது செய்யததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கண்காணிப்புக் குழுவின் கோரிக்கைக்கு அமைவாக புலி உறுப்பினர்கள் இருவரையும் விசாரணையின் பின் விடுதலை செய்யதாகவும் பொலிஸார் உறுதியளித்தனர்.

ஆனால் இதற்கு மாறாக கைதுசெய்யப்பட்ட வே.பரணிதரன் என்ற போராளியை மட்டும் விடுதலை செய்யத பொலிசார் மற்றைய போராளியான சி.சத்தியராஜ் என்பவர் மீது ராசிக் குழு உறுப்பினர்களின் வேண்டுகோளிற்கு அமைவாக கொலைக் குற்றத்தை சுமத்தி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இதனால் அவரை எதிர்வரும் 19ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி அப்துல்கபூர் உத்தரவிட்டார்.

இவ்வாறு பொலிஸார் தாம் கொடுத்த வாக்குறுதியை மீறி அரசியல் பணிக்காக சென்ற போராளி மீது அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்தி கைது செய்து நீதிமன்ற உத்தரவில் விளக்க மறியலில் வைத்துள்ளனர்.

கண்காணிப்புக் குழுத் தலைவரும் சம்மந்தப்பட்ட போராளி மீது கொலைக் குற்றம் இருப்பதாக பொலிஸார் கூறுகின்றனர் என்றும் இதனால் தாம் ஒன்றும் செய்யமுடியாதுள்ளது என்றும் கைவிரித்துளளார்.

இந்த நிலையில் ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எஸ்.வீ.எம்.சேனாரட்ண, எஸ்.பி. நிகால் ஆகிய இரண்டு பொலிஸாரையும் எமது பிடியில் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது போராளி விடுதலையானால் மாத்திரமே பிரஸ்தாபப் பொலிஸார் இருவரும் விடுதலை செய்யப்படுவர் என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இதேவேளை நீதிமன்ற தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள போராளியை விடுதலை செய்யுமாறு கோரி இன்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-14)

---

## உரும்பிராய்...

காவலாளியும் கைதுசெய்யப்பட்டார். அத்துடன் இவ்வில்லத்தை நடாத்திவரும் பெண்மணியை எதிர்வரும் 25ம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வில்லத்தில் 19 ஆண்பிள்ளைகளும் 15 பெண்பிள்ளைகளும் பர்ாமரிக்கப்பட்டுவருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் இடம்பெற்ற இரண்டாவது பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் இதுவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-77)

---

## புனர்வாழ்வு...

மக்கள் மேம்பாடு கருதி ஆற்ற முடியும் எனக்குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கருத்துரை வழங்கினர்.மேலும் இரு வாரகாலத்தில் நடத்தப்படவுள்ள மற்றொரு கூட்டத்திலேயே மதியுரைஞர் குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யபபடவுள்ளனர். (இ-77,4)

# திருடன் அகப்பட்டான்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் திருட முயன்ற நபர் ஒருவர் வசமாக மாட்டுப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றது. ஆலயத்தினுள் சத்தம் கேடடதை அடுத்து அயலில் உள்ளவர்கள் திரண்டு தேடுதல் நடத்திய போது மணிக்கூட்டுக் கோபுரத்துக்குள் மறைந்திருந்த திருடன் வசமாக மாட்டுப்பட்டு நையப் புடைக்கப்பட்டான். (ந)

# பொதுமக்கள்மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்றுமுன்தினமிரவு 7.30 மணியளவில் பொலிஸார் இருவர் விடுதலைப்புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டமையை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து வீதியால் சென்ற பொதுமக்கள் பொலிஸாரின் கொட்டனடிக்கு இலக்கானதாகவும் சுமார் 20 வரையான பொது மக்கள் இதனால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-14)

# சயனைற் அருந்தியவர் இனங் காணப்பட்டார்

( கொழும்பு)

வெள்ளவத்தையில் வீதியால் சென்ற ஓட்டோவை பொலிஸார் மறித்து சோதனையிட முற்பட்ட போது சயனைற் உட்கொண்ட இளைஞர் மட்டக்களப்பைச் சேர்ந்த பேரம்பு செல்வராஜா என இனங் காணப்பட்டுள்ளார்.

ஓட்டோவில் இருந்த மற்றைய இளைஞரான சுன்னாகத்தைச் சேர்ந்த வைரமுத்து நித்தியானந்தன் என்பவரிடமிருந்து 9 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றினர்.

ஓட்டோ சாரதி மகாலிங்கம் ஸ்ரீதரன் என்பவர் ஊறுகொடவத்தையைச் சேர்ந்தவரென தெரியவந்துள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தீவிர விசாரணைதளை முடுக்கி விட்டுள்ளனர். (த)

# கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் 'இலங்கை இனப்பிரசினைக்கான தீர்வும் உலகளாவிய சவாலும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளை மாலை 3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

கருத்துரையினை சமூக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கே.ரி கணேசலிங்கம் வழங்குவார். (ந-3)


## வேலைக்கு ஆள் தேவை

புத்தகங்கள் வைண்டிங் செய்யக் கூடிய பெண்பிள்ளைகள் தேவை.

அனுபவமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பத்தை

விளம்பர இல– 100
வலம்புரி
இல 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்



## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி- முத்துக்குமாரு

(கேசாவில் பிள்ளையார் கோவிலடி)

வண்ணார் பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக்கொண்ட சின்னத்தம்பி முத்துக்குமாரு நேற்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற சிவக்கொழுந்து முத்துக்குமாருவின் அன்புக் கணவரும் இந்திராணி, தனபாலசிங்கம் (முன்னாள் C.T.B உத்தியோகத்தர்) பூபாலசிங்கம் (C.T.B பருத்தித்துறை டிப்போ) விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு அரசடி ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல

பத்மாஜினி அகம்.
அரசடி ஒழுங்கை.
திருநெல்வேலி கிழக்கு.
யாழ்ப்பாணம்.

மு. தனபாலசிங்கம்
மு. பூபாலசிங்கம்
(புதல்வர்கள்)

(c/6275)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்12.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.